July 2009
Issue : 19

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை





சதீஸ்குமார் பிரசன்யா தம்பதிகள் வழங்கிய

## நர்த்தன நிவேதனம்



கலாபூஷணம்
ச.அருளானந்தம்
(கேணிப்பித்தன்)



கலாபூஷணம்
'சிவநெறிச் செம்மல்'
வை.அநவரத விநாயகமூர்த்தி

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை-இலக்கிய-பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்

ஆடி : 2009
வீச்சு : 19

50/=

## அன்பானவர்களே!

✳ இவ்வருடத்திற்குரிய (2009) சந்தாவை இதுவரை செலுத்தாதவர்கள் சந்தாத் தொகையான ரூ.750/= ஐச் செலுத்தி உதவுங்கள்.

✳ அன்பளிப்புக்களை வழங்க விரும்பும் நலன்விரும்பிகள் அதனை நடைமுறைப்படுத்தி உதவுங்கள்.

✳ **வங்கி :** மங்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.
**கணக்கு இல :** 113100138588996 (நடைமுறைக்கணக்கு)
**காசுக்கட்டளை :** அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

✳ பணத்தைத் தொகையாக ஆசிரியரிடம் நேரிலோ/ காசுக்கட்டளையாகவோ / காசோலையாகவோ / வங்கி வைப்பு மூலமாகவோ செலுத்தலாம்.

✳ காசோலைகள் / காசுக்கட்டளைகளை **த.கோபால கிருஸ்ணன்** என்று பெயரிடுக.

✳ உங்கள் ஆதரவை அளித்து **'செங்கதிர்'** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.

**மலையகத்தில் 'செங்கதிர்' கிடைக்குமிடங்கள்**

| **ஹட்டனில்** | **பதுளையில்** |
|---|---|
| **கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்** | **V.அந்தனிஸ்** |
| 86, சைட் வீதி, | 120/2, கனுபெலலல் வீதி, |
| ஹட்டன். | பதுளை. |

"இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை"

# செங்கதிர்

▶தோற்றம் : 30.01.2008◀

**19**

ஆடி 2009 (தி.வ ஆண்டு 2040)

▶2வது ஆண்டு◀


ஆசிரியர் : **செங்கதிரோன்**
துணை ஆசிரியர் : **அன்புழகன் குரூஸ்**
தொ.பேசி / Tel : 0777492861
மின்னஞ்சல் / E-mail : croos_@yahoo.com



**தொடர்பு முகவரி :**
**திரு.த.கோபாலகிருஸ்ணன்**
இல.19, மேல்மாடித்தெரு,
மட்டக்களப்பு, இலங்கை.

**Contact :**
**Mr.T.Gopalakrishnan**
19,Upstair Road,
Batticaloa, Sri Lanka.


தொலைபேசி / Telephone
065-2223950 077-2602634

மின்னஞ்சல் / E-mail
senkathirgopal@gmail.com


ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.


ஆசிரியர் பக்கம் .................................. 02
அதிதிப்பக்கம் .................................. 03
அடிமை வாழ்க்கை (சிறுகதை)....... 05
கதிர்முகம் .................................. 11
மாலைப்பொழுதுகளில் (கவிதை) .... 13
'காலச் சுவடுகள்' சரித்திர நூல் மட்டக்களப்பு வாழ்வியலைக் கூறுகிறது .................................. 14
எனக்குப்பிடித்த என் கதை ........... 20
ஒரு படைப்பாளனின் மனப்பதிவுகள் - 6 .......................... 27
விளைச்சல் - 15 (குறுங்காவியம்)... 33
ஒற்றுமைக்கீதம் ஒலிக்கட்டும் (கவிதை) 35
சொல்வளம் பெருக்குவோம்-4 ....... 36
பகிர்வு .................................. 37
மலையகத்தில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் - 3 (தொடர் கட்டுரை).... 40
வேரும் விழுதும் .......................... 44
செங்கமலம் -6 (தொடர் நாவல்)....... 48
கல்யாணம் வரை (குறுங்கதை) .........53
கர்ப்பூர மேனியல்லோ மாது (கவிதை) 54
பதிவு .................................. 55
சிலேடைப் பாடல்கள்........................ 57
ஐயரின் ஆமைக்குற்றி (கவிதை) .... 58
விளாசல் வீரக்குட்டி.......................... 59
[illegible]வில் (வாசகர் பக்கம்) ................ 61

# ஆசிரியர் பக்கம்



23.04.1935 - 27.06.2009

கடந்த மாதம் (27.06.2009) ஈழத்து இலக்கிய உலகு மாபெரும் இழப் பொன்றை எதிர்கொண்டது. தேசிய கலை, இலக்கியப் பேரவையின் தலை வர் ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சி யில் பெரும் பங்களிப்பாற்றிய மூத்த கவிஞர் - தமிழறிஞர் - திறனாய்வாளர் - முற்போக்குச் சிந்த னையாளர் **கவிஞர் இ.முருகையன்** அவர்களின் மறைவே அந்த மாபெரும் இழப்பாகும்.

**"இலக்கியம் என்பது வெறும் புளிச்சல் ஏப்பக்காரர்களின் விவகாரம் அல்ல. பொறுப்புணர்வுடனும் அவதானமாகவும் அக்கறையுடனும் ஆற்றப்படவேண்டிய ஒருவகைத் தவம்"** என மனதில் வரித்துக்கொண்டு வாழ்ந்த சமூக சிந்தனையாளன்.

அவரது இழப்பு சமூக சிந்தனையாளர்களுக்கும் மக்கள் இலக்கியவாதிகளுக்கும் சமூக மாற்றம் வேண்டி நிற்கும் புதிய தலைமுறைப் படைப்பாளிகளுக்கும் பேரிழப்பாகும். மேலும், தமிழ்க் கலைச் சொல்லாக்கத்திற்கு அமரர்.இ.முருகையன் ஆற்றிய பணி ஆக்கபூர்வமானது. எழுத்தே மூச்சாய் ஓயாது எழுதிக் கொண்டிருந்த அமரர் முருகையனின் உயிர் உறங்கிவிட்டாலும் நூல் உருவம் பெறாத அவரது ஆக்கங்களை வெளிக்கொணர்வது தமிழ் இலக்கிய உலகின் பாரிய கடமைகளில் ஒன்று என்பதை 'செங்கதிர்' வலியுறுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயர் கொள்ளும் அவரது குடும்பத்தினருக்கும் - தேசிய கலை இலக் கியப் பேரவையினருக்கும், அவரது உற்றார், உறவினர், இலக் கிய நண்பர்கள் அனைவருக்கும் 'செங்கதிர்' தனது அனுதாபத் தினை உரித்தாக்குவதுடன், அமரர் முருகையனுக்கு சிரம்தாழ்த்தி அஞ்சலிக்கின்றது.

**- செங்கதிரோன்.**



# அதிதிப்பக்கம்



**'செங்கதிர்' இதழின் இம்மாத அதிதி 30.05.2009 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இலக்கிய முதுமாணிப் பட்டம் - *Degree of Master of Letters (Honoris Causa)* வழங்கப்பெற்ற ஈழத்தின் மூத்த எழுத்தாளர்**

## கலாபூஷணம் திரு.சண்முகம் அருளானந்தம் (கேணிப்பித்தன்) அவர்களாவர்.

★ திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்கேணியில் 30. 01. 1937ல் பிறந்து, ஆரம்பக் கல்வியை ஆலங்கேணிப் பாடசாலையிலும், ஆங்கிலக் கல்வியை மட்/சிவா னந்த வித்தியாலயத்திலும், ஆசிரியப் பயிற்சியினை மட்/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், பட்டப்படிப்பினைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

★ ஆங்கில ஆசிரியர், அதிபர், *Trained Graduate, SLTS, SLPS, SLEAS,* வவுனியா மாவட்டக் கல்வி அதிகாரி, கோட்டக் கல்வி அதிகாரி, வகிமா கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்து ஓய்வுபெற்றபின், பல அரச சார்பற்ற நிறுவனங்களில் வளவாளரா கவும் கடமையாற்றி, தற்போது OfERR (Ceylon) நிறுவனத்தின் கல்வி, அனர்த்த முகாமைத்துவத்துறையில் ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்.

★ இவரது முதற் சிறுகதை **'இராவணன் கண்ணீர்'** சுதந்திரனிலும் (1964), முதற் கவிதை **'ஏனிந்தப் பிறவி'** சிந்தாமணியிலும் (1964) வெளிவந்ததன் மூலம் எழுத்துலகில் பிரவேசித்தார். சிறுவர் இலக்கியம், கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், பத்தியெழுத்து ஆகிய துறைகளில் பிரபல் யமடைந்தார். **'கேணிப்பித்தன்'** என்ற புனைப்பெயரில் இவரது படைப்புக்கள் சுதந்திரன், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, தினமுரசு, தினக்கதிர், ஈழமணி ஆகிய பத்திரிகைகளிலும், வெற்றிமணி, குமரன், ஞானம், செங்கதிர் உட்பட ஈழத்தின் பெரும்பாலான சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

★ ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் முக்கியமானதும், பெருமளவு வளர்ச் சியடையாததுமான சிறுவர் இலக்கியத்துறைக்கு இவரது பங்களிப்பு

முக்கியமானது. இத்துறையில் இவர் 10 சிறுவர் பாடல் தொகுப்புகள், 06 சிறுவர் கதைத் தொகுப்புக்கள், 07 சிறுவர் நெடுங்கதைத் தொகுப்புக்கள் என மொத்தமாக 23 சிறுவர் இலக்கிய நூல்களை இன்றுவரை எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ சிறுவர் இலக்கியத்துறைக்கு மட்டுமன்றி, சிறுவர் கல்வித்துறைக்கும் இவர் பணிபுரிந்துள்ளார். தான் கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்த வேளையில் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சில் முன்பள்ளிக் கல்விக்கான அலகை உருவாக்கி அனைத்து முன்பள்ளிகளையும் அமைச்சில் பதிவதற்கு வழி வகுத்ததுடன், முன்பள்ளிக்கான பாடத்திட்டத்தை ஆக்கும் குழுவில் ஒருவராகவிருந்து காத்திரமான பணிகள் பல ஆற்றியுள்ளார். இவர் *USA, Belford University* இல் *Early Childhood Development (ECD)* துறையில் கலாநிதி *(Doctor of Arts)* பட்டமும் பெற்றவர்.

**<u>பெற்ற பரிசுகள்</u>**

- ✧ **'ஏன் அழுதார்?'** சிறுகதை பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் - 1975
- ✧ பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் - 1976
- ✧ திருகோணமலை முன்னோடிகள் நடத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் - 1977
- ✧ **'காகமும் தம்பியும்'** சிறுவர் பாடல்கள் : வடகிமா மாகாண சாகித்தியப் பரிசு.
- ✧ **'பயங்கொள்ளலாகாது பாப்பா'** சிறுவர் நாவல் : அகில இலங்கை சாகித்திய விருது.
- ✧ **'மனதுக்கினிய பாட்டு'** சிறுவர் பாடல்கள் : அகில இலங்கை சாகித்திய விருது.
- ✧ **'சின்னத்தேவதைகள்'** சிறுவர் கதைகள் : இலங்கை நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் பரிசு 40,000 பெற்றது. அத்துடன் கிழக்கு மாகாண சாகித்திய விருதும் பெற்றது.
- ✧ **'மனதினிலே உறுதி வேண்டும்'** சிறுவர் நாவல் : இலங்கை நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் பரிசு 50,000 பெற்றது.
- ✧ **'வாக்கினிலே உறுதி வேண்டும்'** இளைஞர் நாவல் : இலங்கை கல்வி அமைச்சின் நூலக சேவைகள் சபையின் பரிசு 50,000 பெற்றது.

**<u>பெற்ற விருதுகள் (பட்டங்கள்)</u>**

- ✧ கலாசார அமைச்சின் **'கலாபூஷணம்'** விருது 2004.



- ✧ வவுனியா நண்பர்கள் இலக்கிய வட்டம் அளித்த **'சிறுவர் இலக்கிய வித்தகர்'** விருது.
- ✧ கிழக்கு மாகாண ஆளுநர் விருது - 2006.
- ✧ கிழக்குப் பல்கலைக்கழக - ***'Master of Literature (M.Lit)***

★ இதுவரை சுமார் முப்பது நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இவர்,

- ✧ **'உள்ளக்கமலம்'** - சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு மலர் – வவுனியா
- ✧ **'சுவைத்தேன்'** - மாகாண தமிழ்மொழித்தின விழா மலர் – 1994
- ✧ **'பார்த்தேன்'** - மாகாண தமிழ்மொழித்தின விழா மலர் – 1995
- ✧ **'மலைத்தேன்'** - மாகாண தமிழ்மொழித்தின விழா மலர் – 1996
- ✧ **'புது ஊற்று'** - வகிமா – கல்வி அமைச்சின் காலாண்டு இதழ்

ஆகியவற்றின் பதிப்பாசிரியருமாவார்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், பன்முக ஆளுமை படைத்த கல்விமானும், சமூக சேவையாளனுமான திரு. ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) அவர்களை 'செங்கதிர்' இதின் இம்மாத அதிதியாக அறியத்தருவதில் 'செங்கதிர்' பெருமையும் மகிழ்ச்சியுமடைகிறது.

**- ஆசிரியர்.**

---

*சிறுகதை* **கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**



*அம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இன்று வெள்ளிக் கிழமை. சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள். இரண்டு மணிக்கு வஸ். அரைநாள் லீவும் எடுத்துக் கொண்டான். பேருந்தைப் பிடித்துப் புறப்பட்டான். ஐந்து மணிக்குப் பேருந்தால் இறங்கியதும் துறையைக் கடக்கவேண்டும். அதிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் கால்நடைதான். கடற்கரை விரிந்துகிடந்தது. கடற்கரை ஓரமாக நடந்தான். அலைகள் அவன் கால்களைத் தொட்டு விளையாடின. மெல்லப் பொழுது இறங்கிக் கொண்டிருந்தது. கடற்கரை ஓரமாகச் சிலர் கரைவலை இழுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் கடற்கரையில் எவ்வளவு நாட்கள் விளையாடியிருப்பான். அவன் சிறுவனாக இருந்த*

போது இந்தக் கடற்கரையில் நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளிலிருந்து பெரிய தோணிகளில் பெப்ருவரி மாதம் தொடக்கம் ஒக்ரோபர் இறுதி வரை வந்து தங்கியிருந்து மீன்பிடிக்கும் மக்களை நினைத்துக்கொண்டான். பல வாடிகளை அமைத்து மீன் பிடிப்பார்கள். கடற்கரை எந்த நேரமும் கலகலத்துக் கொண்டிருக்கும். தமிழ் கலந்த சிங்களம் கதைப்பார்கள். பெர்னாந்து, பெனான்டோபிள்ளை, சூசைப்பிள்ளை எனப் பெயர்கள் இருக்கும். இவர்கள் அத்தனைபேரும் தமிழர்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறி, இப்போது முழுச் சிங்களவர்களாக வாழ்பவர்கள். அவர்கள் இப்போது இப்பகுதிக்கு வருவதில்லை. இப்பகுதி முஸ்லிம் மக்கள் மீனவத் தொழிலில் ஈடுபட்டமையே காரணம்.

நண்பர்களை நினைத்துக் கொண்டான். அவன் சிறுவனாக இருந்த போது ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருக்கும். அந்த ஊரின் மூலை முடுக்குகளில் அவன் பாதம் படாத இடங்களே இல்லை. பாடசாலைக்குக் ‘கட்’ அடித்துவிட்டு சக மாணவர்களோடு சேர்ந்து லூட்டி அடித்த அனுபவங்கள் எட்டிப் பார்த்தன. சிறுவர்கள் என்றால் பயமறியாதவர்கள். பாடசாலைக்குப் போவார்கள். ஒரு மூலையில் ஒன்று சேருவார்கள். அவர்களது திசை வேறுபக்கம் இருக்கும். உப்புநீர்ச் சிற்றாறுகள் ஊரைச் சுற்றி ஓடும். பள்ளங்களும், கணன்பிட்டிகளும் நிறைந்து கிடக்கும். வெள்ளப் பெருக்குக் காலங்களில் உப்புநீர்ச் சிற்றாறுகள் கரைபுரண்டு ஓடும். கிடங்குகள் உருவாகும். உப்பு நீர் தேங்கி நிற்கும். கிடங்குகளில் பல வகை மீன்கள் விளையாடும். உப்பு நீர்ச் சிற்றாறுகளில் வற்றுப் பெருக்கு நிகழும். கோடைகாலங்களில் வற்றுப்பெருக்கு அதிகநீரைக் கொண்டு வருவதில்லை. கிடங்குகளில் சேர்ந்த மீன்வகை கிடங்குகளிலேயே தங்கி வாழும்.

கிராமத்துப் பற்றைக்காடுகளில் ஒருவகைக் கொடியிருக்கும் ‘நச்சுக்கொடி’ என்று கூறுவார்கள். அந்தக் கொடியின் வேர்களைப் பிடுங்கி அளவாக வெட்டி மரக்கட்டைகளில் வைத்துத் தட்டினால் நசிந்துவிடும். நசிந்த வேர்களைக் கிடங்குகளில் தேங்கியுள்ள நீரில் கலக்கிவிட்டால் மீன்கள் மயங்கிவிடும். பிடிப்பதற்கு இலகுவாக இருக்கும். பங்கு போட்டு வீடுகளுக்கு எடுத்துச் செல்வார்கள். மீனைக் கண்டதும் அம்மாக்குச் சந்தோஷம் பிறக்கும். “ எப்படி இந்தப் பெரிய மீன்களைப் பிடித்தாய்?” அம்மாவின் கேள்வி வரும். “எங்கட நாகராசர் கனக்க மீன்பிடிச்சவராம். அவர்ர மகன் என்ட கூட்டாளிதானே அவன் தந்தான்”. பொய்தான். ஆருக்கும் துன்பம் தரும்படி கூறும் பொய்தான் சொல்லக்கூடாது. அம்மா சொல்லித் தந்தவ. இந்தப் பொய் சொல்வதில் தப்பில்லை. மனதுக்குள் தேற்றிய நாட்கள் எத்தனை?



ஒருநாள் பாடசாலைக்குக் ‘கட்’ அடித்துவிட்டு, நண்பர்களோடு புறப்பட்டுவிட்டான். புத்தகங்களும் உடைகளும் மரக்கிளையில் தொங்கின. அம்மணமாய் கிடங்குகளில் இறங்கி நீச்சல் அடித்து மீன்பிடிக்கும் போது கையும் மெய்யுமாய் அப்பாவிடம் மாட்டி வாங்கிக்கட்டினதை நினைத்துக் கொண்டான். அப்பாமேல் கோபம் கோபமாக வரும். ஆனால் அந்த நேரத்தில் அப்பா சரியான முடிவு எடுத்திருக்காவிட்டால் வாழ்க்கை எவ்வளவு கஸ்டமாகப் போயிருக்கும் என்பதை நினைக்கும் போது அப்பா மேல் அன்பும் பாசமும் பொங்கி வந்தது. நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அப்பா இறைவனிடம் போய்ச்சேர்ந்திட்டார். பெருமூச்சுப் பறந்தது. மனம் கசிந்து நெக்குருகியது. அதிலிருந்து விடுபட்டு பழைய நினைவுகளில் மனதைத் திருப்பினான். நிலாக்காலங்களில் கிராமத்தின் மணல்வீதிகளில் விடியவிடியக் கிளித்தட்டுப் பாய்ந்து, விளையாடிய மணலிலேயே படுத்துறங்கிய சந்தோஷமும் மனதில் வந்து குந்தி அசைபோட்டது. சிரிப்பாக வந்தது. இனிய நினைவுகளில் மூழ்கினால் களைப்பே தெரியாது. கால்கள் நடந்தன. தனிமையில் இருக்கும்போது தான் சிந்தனை சிறகடிக்கிறது. இந்த ஆத்மா உடலை விட்டு எங்கெல்லாமோ போய் அலைந்து பழைய நினைவுகளில் மூழ்கி வருகிறது. இதுவும் ஒருவகை யோகம்தானோ? மேற்கே சூரியன் அவசரமாக மறைந்து கொண்டிருந்தது. உலகம் தோன்றிய காலத்திலிருந்து சூரியன் உதிப்பதற்கோ, மறைவதற்கோ மறந்ததில்லை.

அவன் ஊர்போய் சேரும்போது இருள் பரந்துவிட்டிருந்தது. வீதிகளில் யாரும் இல்லை. ஊர் இப்போது அடங்கிப் போய்க்கிடந்தது. வீடுகளில் வெளிச்சங்களும் குறைந்திருந்தன. படலைகள் இறுக்கி மூடிக் கிடந்தன. பயப்பிராந்தி மனதை விரட்டியது. கூப்பிடு தூரத்தில் வீடு இருந்தது. சந்தியில் இருக்கும் கோயிலைத்தாண்டித் திரும்பினால் இடப் பக்கமாக வீடு தெரியும். இன்னும் ஐந்து நிமிசத்தில் வீடு வந்துவிடும். நிழலாக உருவங்களைக் காட்டும் இருள். “ஆரது...தம்பி...இந்த நேரத்தில... எனக்கு மதிக்கேலாமல் கிடக்கு...நாடு கிடக்கிற கிடயில... கால நேரந்தெரியாதா... கெதிபண்ணி வீட்டபோ....” அது பார்வதியாச்சியின் குரல்தான். அவரது குரலில் இருந்து இனங்கண்டு கொண்டான். பார்வதியாச்சி படலையைச் சாத்திக் கட்டிக்கொண்டிருந்தார். “நான்தான் ஆச்சி... ஆறுமுகம். இப்பதான் வாறன்” - பதிலளித்தான். “ஆறுமுகமா.. இப்பத்தான் வாறாயா? சரி..சரி..நாளைக்கு வா, கதைப்பம். இப்ப கெதியாப் போ... வெடிச்சத்தம் கேக்குது” பார்வதியாச்சி அவசரப்படுத்தினாள். ஆறுமுகம் அதிர்ந்து போனான். அவனுக்கு உள்ளூர வேர்த்தது. நடையை விரைவு

படுத்தினான். நாய்கள் குரைக்கும் சத்தம் செவிப்பறைகளை அடைத்தது. கால்கள் நடையை விரைவுபடுத்தின. வீட்டை நெருங்கிவிட்டான். வீட்டுப் படலையைத் திறந்தான். அந்தச் சத்தம் கேட்டிருக்கவேண்டும்.

"ஆரது..." குரல் கொடுத்தபடி அரிக்கன் லாம்போடு செல்லம்மா வெளியில் வந்தாள். "நான்தான் அம்மா" ஆறுமுகம் பதிலளித்தான். மகனின் குரலைக் கேட்டதும் உசாரானார். அரிக்கன் லாம்பைத் தூக்கிப் பிடித்தபடி "என்ன மனே...சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கின்றாய்... இஞ்சால கெதியா வா..வா.." வெளிச்சம் படலை வரை பரந்து இருள்கலைந்தது. உள்ளே சென்றான். அரிக்கன் விளக்கைத் திண்ணையில் கிடந்த மேசைமேல் வைத்துவிட்டுக் கதைத்துக் கொண்டே மகனுக்குத் தேநீர் தயாரிக்கலானார். அவன் தனது பையை மேசையில் வைத்துத் திறந்து மாற்றுடுப்பை எடுத்தான். "அம்மாவைப் பாக்கனும்போல இருந்திச்சி. புறப்பட்டு வந்திற்றன்". உடுப்பை மாற்றியவாறே சொன்னான். "அதுக்காகக் காலங்கெட்ட நேரத்தில வாறதா? நேரத்துக்கு வந்திருக்கலாம்தானே?" அன்பாகக் கடிந்து கொண்டாள். ஆனால் மகனைக் கண்ட சந்தோஷம் அவள் மனதில் குந்திக்கொண்டது. மனதுக்குள் பாசம் பரந்து கொண்டது. அம்மாவின் பாசமொழி அவனைக் கிறங்கச் செய்தது. "என்னம்மா செய்யிறது? எத்தனை இடத்தில சோதனைச் சாவடிகள். ஏறியிறங்கி வந்து துறையைக் கடந்து நடந்து வாறன். அதுதான் இவ்வளவு நேரம்" தேநீரை ருசித்தவாறே அம்மாவை அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தான்.

அம்மா சற்று இளைத்திருந்ததை அவதானித்தான். " என்னேய்.. அம்மா.. சுகமில்லாமல் இருந்ததா? உடம்பு இளைச்சிருக்கு. ஒரு கடுதாசி போட்டிருந்தால் வந்திருப்பன்தானே?" அன்போடு கூறினான். " அதெல்லாம் ஒண்டுமில்ல மனே, மனசில நிம்மதியில்ல. காலம் கெட்டுக்கிடக்கிறது. பொழுதுபட்டால் விடியுமட்டும் பயம். விடிந்தால் பொழுதுபடுமட்டும் பயம்.. இப்படி பயந்து பயந்து வாழவேண்டிய அடிமை வாழ்க்கை வாழுறம்". பெருமூச்செறிந்து அம்மா கூறினாள். "இண்டைக்குக் காகம் சுற்றிச் சுற்றிக் கத்திக்கொண்டு கிடந்தது. ஆராவது வரப்போறாங்க எண்டு நினைச்சன். ஒருவேளை என்ர புள்ள வந்தாலும் வருவான் என்றும் நினைச்சன். நீ வந்திட்டாய்" அம்மா கூறும்போது அவளது முகத்தையே உற்றுப் பார்த்தான். அவளது முகத்தில்தான் எத்தனை சந்தோச ரேகைகள் பரந்தோடுகின்றன. என்னதான் பிள்ளை வளர்ந்து பெரியவனாகித் திருமணம் செய்து பிள்ளைகுட்டிகளைப் பெற்றாலும், ஒரு தாய்க்குத் தன் பிள்ளை எப்போதும் சிறுகுழந்தைதான். பிள்ளைகள்தான் பாசத்தை மறந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். "மனே.. மேலக்கழுவிட்டு வா, சாப்பிடுவம்" கூறிக் கொண்டு அடுக்களைக்குள் புகுந்தாள்.



ஆறுமுகம் குளித்துவிட்டு வந்தான். அம்மா இருந்த கறிவகைகளைச் சூடேற்றினாள். சாப்பாடு தயார். அவன் குளித்துவிட்டுச் சாமியறையில் திருநீறு சாற்றி "எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே" எனக்கும்பிட்டு வெளியே வந்தான். தூரத்தில் நாய்கள் குரைத்தவண்ணம் இருந்தன. "வாமனே சாப்பிடுவம்" அவனை அழைத்தாள். அவன் அடுக்களைக்குள் வந்து விரித்திருந்த பனையோலைப் பாயில் இருந்தான். "என்னம்மா ஒரே நாய் குலைக்கும் சத்தம்..?" கேட்டான். "இப்பிடித்தான் மனே... விடிய விடிய நாய் குலைத்தபடிதான் இருக்கும். ஆமிக்காரங்கட நடமாட்டம் தான். வெடிச்சத்தங்களும் கேட்கும். நெஞ்சைப்பிடித்தபடி கிடக்கிறது தான். என்ன செய்யலாம். நம்மட நாட்டுநில இதுதான். இப்ப கண்டபடி ஊருக்குள் போக ஏலாது. சட்டம்" தட்டில் உணவு பரிமாறிக்கொண்டே சொன்னாள். "அம்மா சாப்பிடல்லையா?" கேட்டான். "இன்னும் இல்ல மனே. இனித்தான். நீ முதலில் சாப்பிடு. பிறகு நான் சாப்பிடுறன்." அவன் சாப்பிடக் கையை வைத்தான். படலையில் சத்தம் வந்தது. "மே... அம்மே... யாரு... இப்ப வந்தது. வரச்சொல்லுங்க வெளியே" அவள் எழுந்து வெளியே வருமுன் இரண்டு ஆமிக்காரர்கள் உள்ளே வந்துவிட்டார்கள். அவர்கள் கையில் துப்பாக்கிகள். "ஊருக்குள்ள யாரும்சரி வந்தா ஸ்ரேசன்ல அறிவிக்கனும்தானே. தெரியாதா சட்டம்?" வந்தவர்கள் சத்தமிட்டார்கள். அவளுக்கு வெடுவெடுத்தது. செல்லம்மா வெளியில் வந்தாள். தொடர்ந்து ஆறுமுகம் வெளியில் வந்தான். "அது ஆருமில்ல. என்ர மகன் ஆறுமுகம். இப்பதான் வவுனியாவில இருந்து வந்தவன்" உண்மையைச் சொன்னாள்.

"அது ஆருவெண்டாலும் சரி... அறிவிக்கத்தானே வேணும். அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். "இப்ப இருட்டிப்போச்சு. இருட்டின பிறகு வெளியில் வரப்படாது என்றுதான்..." அம்மா இழுத்தாள். அவளுக்கு மனம் படபடத்தது. "அது எல்லாம் நமக்குத் தெரியாது. ஏய்... பேரென்ன?" ஆமிக்காரன் கேட்டான். "ஆறுமுகம்" சொன்னான். "சரி... சரி... என்ட.... வாங்க... பொயின்ருக்கு. பெரியவரிட்ட வந்து சொல்லுங்க" அவர்கள் வரும்படி வற்புறுத்தினார்கள். "மாத்தயா காலமைக்கு வந்து பதியிறம். இப்பத்தான் புள்ள வந்தவன். சாப்பிடக்குந்தினான். சாப்பிட்ட

பிறகு வாறம்" அம்மா கெஞ்சினாள். "அதெல்லாம் நமக்குத் தெரியாது வந்து சொல்லுங்க" ஆமிக்காரர்கள் ஒரே பிடியாய் நின்றார்கள். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியாது. நடப்பது நடக்கட்டும். அப்படியே புறப்பட்டான். அம்மா சாப்பாட்டை மூடிவைத்தாள். அடுக்களையின் பன்னாங்குக் கதவை இழுத்து மூடினாள். அரிக்கன் லாம்பையும் எடுத்துக் கொண்டு பின்னால் புறப்பட்டுவிட்டாள்.

ஆமிக்காரர்கள் ஆறுமுகத்துக்கு முன்னாலும் பின்னாலும் நடந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் அரிக்கன் லாம்போடு ஆறுமுகத்தின் அம்மா. 'ஆமிப்பொயின்ற்' அலுவலகம் திறந்திருந்தது. ஆனால் அலுவலர் இல்லை. "அப்படி நில்லுங்க" ஒருவன் கட்டளையிட்டான். ஒருவன் ஆமிப்பெரியவர் இருக்கும் பக்கத்து வீட்டுக்குப் போனான். ஒரு நிமிடம் ஒரு வருஷமாக நகர்ந்தது. களைப்பும் பசியும் ஆறுமுகத்தைக் குடைந்தெடுத்தன. அவனுக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு சமநிலையைப் பேணினான். எவ்வளவு நேரம் நின்றிருப்பான். அம்மாவைப் பார்த்தான். ஆமிப்பொயின்ற் கேற்றுக்கப்பால் அரிக்கனோடு குந்தியிருப்பது தெரிந்தது. " நான் வந்தது தப்பாகப் போச்சுது என்னால்தானே அம்மா வெளியில இந்த நேரத்தில காத்துக்கிடக்கிறார். நான் வராமல் அங்கேயே நின்றிருக்கலாம்" மனதுக்குள் வருந்திக்கொண்டான். ஆமிப் பெரியவரின் வீட்டில் நடப்பது தெரிந்தது. போனவன் "சேர்" என்று மெல்ல அழைத்து வெளியிலே நின்றான். அவரை வெளியிலே காணவில்லை.

பாதுகாப்புப்படை அதிகாரிகளைச் சாதாரணதரப் படைவீரர்கள் நினைத்தமாதிரிச் சந்திக்க முடியாது. எவ்விதமான விசயங்களாக இருந்தாலும் முன் அனுமதிபெற்று, அவர் விரும்பினால்தான் அதனையிட்டுப் பேசலாம். அங்குதான் 'ஆண்டான் அடிமை' என்பதன் தாற்பரியம் புரியும். படையதிகாரியைச் சந்திப்பதில் பயமிருந்தாலும், நல்ல பெயர் வாங்குவதற்காக இப்படித் தவங்களும் புரியவேண்டும். எசமான் அவர்களை நடத்தும் முறைகளுக்கேற்ப, ஏவலாளிகளும் அவர்களுக்குக் கீழுள்ளவர்களை நடத்துவார்கள். தன்னை எஜமானாக நினைத்துக் கொண்டுதான் என்னோடு அவன் நடந்துகொண்டான். அந்தச் சிப்பாயைக் குறைகூறிப் பயனில்லை. நின்றுகொண்டே நடப்பதை அவதானித்தான். அம்மாவையும் பார்த்துக்கொண்டான். அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் அம்மாவின் நிழல் தெரிந்தது. "என்ர புள்ளைக்கு எவ்வளவு பசியாக இருக்கும். என்னப் பார்க்க வந்ததாலதானே.. இந்தக் கஸ்டம். பாவம் இனி வர வேண்டாமென்று சொல்லவேணும். செல்லம்மாவின் மனதிற்குள் வேதனை அரித்தது. நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. **(அடுத்த இதழில் முடியும்)**



## கதிர்முகம்



மட்டக்களப்பு பரதகலாலயாவின் சிரேஸ்ட மாணவர்களான சதீஸ்குமார் பிரசன்யா தம்பதிகள் வழங்கிய நர்த்தன நிவேதனம் பரதநிகழ்வும்; நூல், இறுவெட்டு வெளியீடும் 09.05.2009 அன்று மட்/மகாஜனக் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

மட்டக்களப்பு இராமக்கிருஷ்ணமிஷன் **ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா** அவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் **திரு.A.M.E.போல்** அவர்களும், கௌரவ விருந்தினராக நாட்டியவேள், கலாபூஷண கலைஞர் **திரு.வேல் ஆனந்தன்** (முன்னாள் அழகியற்கல்வி உதவிப்பணிப்பாளர், வடக்குக் கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு, திருகோணமலை) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக **திரு.V.லக்ஸ்மி சுந்தரம்** (அதிபர்-மட்/ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), **திருமதி. சு.கனகசிங்கம்** (அதிபர்-மட்/மகாஜனக்கல்லூரி), **திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம்** (முன்னாள் கலாசாரப்பணிப்பாளர், வடக்குக் கிழக்கு மாகாணம்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இவ் ஆடல் தம்பதியினர் தமது குரு பரதசூடாமணி.திருமதி. சுபித்திரா கிருபாகரனுடன் இணைந்து க.பொ.த. சாதாரண தரத்திற்கும் வட இலங்கை சங்கீத சபை 1ம், 2ம், 3ம் தரங்களுக்குமான செய்முறைகள் அடங்கிய (அடவுகள், அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம்) **"பரத அடவுகளும் உருப்படிகளும்"** எனும் இறுவெட்டும் அதற்குப் பொருத்தமான நூலும் வெளியிடப்பெற்றன.

மேலும், பரதகலாலயா அணிசேர் கலைஞர்களான கலாபூஷணம் **ஜீவம் யோசப்** (வயலின்), லய இசைச்செல்வன் **வேல்முருகு ஸ்ரீதரன்** (மிருதங்கம்), இசைக்கலைமணி **திரு.சங்கரநாதன் தேவகுமார்** (பாட்டு), சங்கீத வித்வான் **செல்வி.சியாமளாங்கி கருணாகரன்** (பாட்டு) குழுவினரால் ஆடல் தம்பதிகளான சதீஸ்குமார் பிரசன்யா தம்பதிகளுக்கு **"நவரஸ நர்த்தன தம்பதிகள்"** எனும் பட்டமும், இவர்களின் குரு பரதசூடாமணி திருமதி.சுபித்ரா கிருபாகரன் அவர்களுக்கு **"நிருத்தியப் பேரொளி"** பட்டமும் வழங்கப்பட்டன.


நிகழ்ச்சிகள் **திரு.த.ஈஸ்வரராஜா** (உதவிப் பணிப்பாளர், இளைஞர் சேவைகள் மன்றம்) அவர்களால் தொகுத்து வழங்கப்பட்டன.

## சதீஸ்குமார் – பிரசன்யா ஆடல் தம்பதிகள்



ஆடல் தம்பதிகளான சதீஸ்குமார் – பிரசன்யா இருவரும் சிறுவயதிலிருந்தே மட்டக்களப்பு பரத கலாலயாவில் பரதம் பயின்று சிரேஷ்ட மாணவர்களாக இருந்து பரதகலாலயாவின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றி பாராட்டுப்பெற்றவர்கள். இருவரும் க.பொ.த. (உயர்தரம்) நடன பாடத்தில் அதி திறமைச் சித்திபெற்றவர்கள். அகில இலங்கைத் தமிழ்மொழித் தின போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்றவர்கள். வட இலங்கை சங்கீத சபையில் ஆசிரியர் தரம் சித்திபெற்றவர்கள். சதீஸ்குமார் கலாவித்தகர் பட்டம் பெற்றவர். இருவரும் பட்டதாரி ஆசிரியர்கள். நடனத்துறையில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கலைக்காவேரி நுண்கலைக் கல்லூரியில் MFA (Bharatham) பயின்று முடித்தும், படித்தும் கொண்டிருக்கின்றனர். 'களையான வசீகரமுகமும், பழகுவதற்கு இனிய சுபாவமும் சுறுசுறுப்பும், விடயங்களை கிரகிக்கும் சக்தியும், விவேகமும், அறிவும், பணிவும், குருபக்தியும் ஒருங்கே மிக்கவர்கள். திறமையாக நாட்டிய நுணுக்கங்களை வெளிக்காட்டி நாட்டிய அமைப்புகள் கூட திறமையாக அமைக்கக்கூடியவர்கள் இவர்கள்' என்ற இவர்களது குரு – மட்டக்களப்பு பரதகலாலயா இயக்குனர் பரதசூடாமணி சுபித்ரா கிருபாகரன் அவர்களின் பாராட்டுக்கூற்றை 09.05.2009 அன்று நடைபெற்ற நர்த்தன நிவேதனம் நிகழ்வில் இவ் ஆடல் தம்பதியினர் மெய்ப்பித்தனர். ■

## வரவு 'படிகள்' -22




இருமாத இலக்கிய இதழ் – மே 2009

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | நண்பர்கள் இலக்கியக்குழு<br>அநுராதபுரம்<br>நட்சத்திர நற்பணி மன்றம். |
| தொடர்புகளுக்கு | : | "படிகள்"<br>இல.519G / 16,<br>ஜெயந்தி மாவத்தை,<br>அநுராதபுரம் # 50000<br>இலங்கை.<br>0713485060 / 0726155244<br>Padihal@yahoo.com |
| விலை | : | 30/- |



## மாலைப் பொழுதுகளில்......

ஒவ்வோர் ஊரிலும்,
ஒவ்வோர் இடத்திலும்
மங்கிடும் மாலைப்பொழுதுகளில்....
அரங்கேறும் -
அரைமயக்க ஞானிகளின்
மதிமயங்கும் ஒன்றுகூடலில்
ஒன்றாக -
ஐஸக் நியூட்டன்
அறிந்திராத அறிவு,
தோமஸ் ஆல்வா எடிசனுக்குத்
தோன்றாத நுண்ணறிவு,
நிலவில் ஏறி, மீண்ட
நீல் ஆம்ஸ்ட்ரோங் காணாத புதுமை,
'நாஸா' விஞ்ஞானிகளால்
நவிலப்படாத கருத்துக்கள்...
ஒரு மாலைப்பொழுதில்,
ஆற்றங்கரையோரத்தில்,
பசும் புற்றரையைப் பஞ்சணையாக்கி....
படுத்துக்கிடக்கும்
பத்துக்குக் குறையாத
நம்நாட்டு 'விண்ஞானி' களால்
விலாவாரியாய் 'நிலவு' த் தலைப்பில்
விளாசப்படுகின்றன!
கஞ்சாப் புகைமூட்டம்
சுற்றாடலை வளைத்துக்கொள்ள!
நிலவின் அமைவு தொட்டு,
அழகும், அளவும்,
ஏன் நிறைகூட....
வெகு துல்லியமாய்
தொகுக்கப்படுகின்றன!
நிலத்தில் அமர்ந்தவாறே...
நிலவின் -
ஒவ்வொரு துணிக்கை மண்ணும்
ஆய்வுகூடக் கருவிகள் இன்றிப்
பகுக்கப்படுகின்றன.
உலக விஞ்ஞானிகள் தோற்றார்கள் போங்கள்!
நாளை மாலை என்ன தலைப்போ?

ஏறாவூர் தாஹிர்.



# ‘காலச்சுவடுகள்’ சரித்திர நூல் மட்டக்களப்பு வாழ்வியலைக் கூறுகிறது

மு.சடாட்சரன்

**து**றைநீலாவணை தனித்துவமும் இயற்கை எழிலும் நிறைந்து, வீரம் விளைந்த நிலம் என்று பெயர்பெற்று, கல்வியிலே உயர்ந்து விளங்குகின்ற பழம்பெரும் கிராமமாகும். இவ்வூரிலே பல கவிஞர்கள் சிறந்த ஆக்கங்களைப் படைத்திருக்கிறார்கள். அதில் கவிஞர் துறையூர் செல்லத்துரையும் ஒருவர்.

இன்று (10.05.2009) கவிஞர் துறையூர் க.செல்லத்துரையின் இரண்டாவது நூலான **‘காலச்சுவடுகள்’** என்னும் வரலாற்று நூலுக்கு - சரித்திரச் சுயசரிதைக்கு கவிஞர் ஜீவா ஜீவரெத்தினம் அரங்கிலே வெளியீட்டு விழா நடைபெறுவது ஒரு சிறப்பான விடயமாகும்.

**‘பாச்சரம்’** என்னும் கவிதை நூலை ஒருசில வருடங்களுக்கு முன் பதிப்பித்து வெளியிட்ட நூலாசிரியர், ஒரு இளைஞனைப்போல் செயற்பட்டு தன் சொந்த ஊரின் வரலாற்றைத் தனது வாழ்க்கையோடு இணைத்துக் கூறுகிறார். ஊரின் வளர்ச்சிக் கட்டங்களையும், அதற்காகச் சேவைபுரிந்தவர்களையும், வாழ்வியல் கூறுகளையும் நினைவுகூர்ந்து எழுதித் தொகுத்து **‘காலச்சுவடுகள்’** என்னும் நூலாகத் தந்துள்ளார்.

கொஞ்சக் காலத்துக்கு முதல் கிழக்கைச் சிதைத்த சூறாவளி வீசிய ஆண்டு, மாதம், திகதி எல்லோருக்கும் ஞாபகத்தில் இருப்பதில்லை. எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தாலன்றி சரியாகச் சொல்லமுடியாது.

இற்றைக்கு எழுபத்தைந்து வருடங்களுக்கு முதல் துறைநீலாவணைக் கிராமம் இருந்த நிலையையும், அப்போதைய வாழ்வியலையும், தாய் தந்தையர் கூறக்கேட்டதையும், கண்டதையும், படித்ததையும் ஞாபகத்தில் வைத்திருந்து நினைத்துத் தொகுத்து தந்திருப்பது பாராட்டத் தக்கதாகும்.

இந்நூல் விரிக்கின்ற, கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கவேண்டும்.



ஒரு மரைக்கால் நெல் இருபத்தைந்து சதத்துக்கு விற்ற காலம், றேடியோ இல்லாத காலம், ஒரு சில பணக்காரரின் வீட்டிலே மட்டும் கிராமப் போன் பெட்டி பாடியகாலம். வக்கிக் கரத்தையை - மொறிஸ் மைனர் கார் மாதிரி - ஊரிலே வசதி படைத்த இரண்டொருவர் வைத்திருந்த காலம். சல்லி சதங்களைக் கொண்டு சந்தையிலே சாமான் வாங்கிய காலம்.

அன்னமலைத்துறையிலே அக்கரப்படுவதற்கு தனியாளுக்கு இரண்டு சதமும், பைசிக்கிளோடு பயணிப்பவர்களுக்கு ஐந்து சதமும் துறைக்காரன் அறவிட்ட காலம்.

வீடு கட்டும்போது வைரக்கால்கள் நாட்டி, நிரைகட்டை வரிச்சு வைத்து அதற்குள் களிமண் துவைத்து வைத்துச் சுவராக்கி வீடமைத்து கூரைக்கு கிடுகு அல்லது வைக்கோல் வேய்ந்து பூசி மெழுகிச் சாணம் போட்டு இல்லறம் நமது முன்னோர்கள் நடத்திய காலம் அக்காலம்.

அக்காலத்து மட்டக்களப்புத் தமிழரின் வாழ்வியல் கூறுகளையும், பழக்க வழக்கங்களையும் பண்பாடு நாகரிகங்களையும் இக்கால இளைஞர் யுவதிகள் அறிந்து சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும், **‘காலச்சுவடுகள்’** என்னும் நூல் சிறந்த தூண்டுகோலாய் அமையும் என்று கூறலாம்.

நாம் கடந்த காலத்தை மறந்து வாழவே முடியாது. எமது தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது இந்த மண்ணிலேதான். அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மடிந்ததும் இந்நாட்டிலேதான். இதனை நாம் ஆதாரபூர்வமாக நிறுவவேண்டிய கட்டாயம் ஒன்று நமக்கிப் போதிருக்கிறது. ஆகவே நாம் கடந்த காலத்தை நினைவுகூர்ந்தும், எதிர்காலத்தைச் சிந்தித்தும், நிகழ்காலத்தை சரியாக அமைத்துக் கொள்கின்ற இனம்தான் நிமிர்ந்தும் நிலைத்தும் இருக்கும் என்பது மறக்க முடியாத உண்மை என்பதை உணர்ந்து வாழவேண்டும்.

இந்நிலையில் துறையூர் க.செல்லத்துரை எழுதிய - மணிமேகலை பிரசுரமான **‘காலச்சுவடுகள்’** நூல் - அதன் களத்திலே வெளியிடப்படுவது மண்ணுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

இந்நூல் 208 பக்கங்களைக் கொண்டதாயும், இவ்வூர்க் கண்ணகி அம்மன் கோயில் படத்தை அழகான அட்டையாகக் கொண்டும் உள்ளடக்கமாக மூன்று பாகங்களைக் கொண்டும் அமைந்துள்ளது. எனது கிராமமும் அக்கால நிலையும் 1ம் பாகமாகவும், எனது இளமைக் காலமும்

சேவையும் 2ம் பாகமாகவும், எனது பிரயாணங்கள் 3ம் பாகமாகவுமுள்ளது.

முதலாம் பாகத்தில், எனது கிராமம், நீராவி இயந்திரப்படகுச் (வோட்) சேவை, கிராமத்தின் நிலை, கண்ணகி கோயில், மக்கள் தொழில், சேனைப் பயிர்ச்செய்கை, வாழ்வியல் முறைகள், பழக்கவழக்கங்கள், கதிர்காம யாத்திரை, சூடுமிதித்தல், கலைநிகழ்ச்சிகள், போக்குவரத்து வசதிகள், இரண்டாம் உலகப்போர் என்று 13 தலைப்புகள் உள்ளன.

இரண்டாம் பாகத்தில், பாடசாலைகள், இளமை, காத்தான்குடி மத்திய பாடசாலை, விடுதி வாழ்க்கை, நடைப்பயணம், கண்ணகி சன சமுக நிலையம், பரீட்சைக்கு தோற்றுதல், ஆங்கில ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி, மலைநாட்டு வாழ்க்கை, சிங்களச்சட்டம், தீயுண்ட வீரமுனை, அ.த.க.பாடசாலை, சேவைகள், மறக்க முடியாத சம்பவங்கள், ஆசிரிய சேவையும் ஓய்வும் என்று 17 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

மூன்றாம் பாகம் இந்தியா, இங்கிலாந்து, கனடா என்னும் மூன்று நாடுகளுக்கு பலமுறை பயணம் செய்து கண்டு அனுபவித்தவற்றைத் தெளிவாகக் கூறுகின்றது.

வரலாற்று நூல் எழுதுகின்றபோது உண்மைக்கு அப்பாற்பட்டதை எழுதமுடியாது. ஏதாவது திரிபுபடுத்திப் பிழையாக எழுதினால் அந்த நூலுக்கு வரவேற்பு இருக்காது என்பது யாவரும் அறிந்ததே. நூலாசிரியர் துறைநீலாவணையின் முன்னோடி ஆசிரியர். இவர் ஊருக்காக உழைப்பதிலே நாட்டங்கொண்டு பல அரிய சேவைகளைச் செய்திருக்கிறார் என்பதும் நூலில் காணக்கூடியதாய் உள்ளது.

இவர் 1955ல் எழுதத் தொடங்கி 1970ல் நிறுத்திக் கொண்டாலும் தற்போது எழுதுவதில் ஆர்வமாக இருக்கிறார். இன்னும் சில நூல்களை எழுதித் தருவார் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு கவிஞர் எழுதிய இச்சரித்திர நூலிலே இடைஇடையே சில காட்சிகளை விபரிக்கின்றபோது இவருடைய அழகியல் உணர்வைக் காணக்கூடியதாயுள்ளது.

கிராமத்தின் நிலையைச் சொல்கின்றபோது "மண்டூர்த் தீர்த்தத்துக்கு முதல்நாள் ஊரிலே பிணைத்த வள்ளங்களைக் கொண்டுவந்து நிறுத்துவார்கள். கூலி அதிகம். சுகமான பயணம். பாய்விரித்து வள்ளம்



ஓடும்போது சல சல என்ற சத்தத்தோடு நீரைக் கிழித்துக்கொண்டு ஓடுவது அலாதியான காட்சிதான்" என்கிறார்.

வாழ்வியல் முறையைச் சொல்கின்றபோது - பொட்டணி வியாபாரி காத்தான்குடி வெள்ளையன் காக்காவைக் காட்டும்போது "புடவை விற்க வரும் வெள்ளையன் காக்காவும் ஒருவர். நல்ல சிவந்த நிறமும் உயரமுமான ஒருவர். சின்னத்தாடியும் வைத்திருப்பார். வெள்ளைக் குல்லா ஒன்றும் தலையிலே போட்டிருப்பார். வயது 60க்கு மேல் இருக்கும். அவரின் பெயர் ஒருவருக்கும் தெரியாது. வெள்ளையன் காக்கா என்றே எல்லோரும் அழைப்பர். பொட்டணியை அவிட்டால் ஒன்றாவது விற்காமல் போகமாட்டார்" என்கிறார்.

மலைநாட்டு வாழ்க்கையைக் குறிப்பிடும் போது - வான்தொடும் பனிபடர்ந்த மலைகள். வெள்ளிக்கதிரென வளைந்து நெளிந்து செல்லும் அருவிகள் என்று வர்ணிக்கின்றார் ஆசிரியர்.

56, 57ல் நடைபெற்ற இனக்கலவரங்களின் வரலாறும், அக்காலத்தில் ஊருக்குள் வந்த படையினரை போராடி திருப்பி அனுப்பிய சங்கதியும் பிரசித்தி பெற்றதாகும். பழக்கவழக்கங்களைக் குறிப்பிடும்போது வீட்டுக்கு வரும் ஒரு வரை வரவேற்றுப் பாய்விரித்து இருக்கச் செய்து வெத்திலை வட்டாவும் படிக்கமும் வைத்து தேநீர் அல்லது மோர்கொடுத்து உபசரித்த பின்னரே வந்த காரியத்தை விசாரிக்கும் பழக்கம் கிராமத்தில் அப்போதிருந்ததாகக் கூறி இப்போது அவை அருகிவிட்டதென்றும், வந்தவரை கடப்படியிலே வைத்து பேசிமுடித்து அனுப்பிவிடுகிறார்கள் என்றும் வருந்துகிறார்.

பிரயாணப்பகுதியிலே இந்தியாவில் புனித - புண்ணியதலங்களைத் தரிசித்தது விபரிக்கப்படுகின்றன. இங்கிலாந்துப் பயணமும், கனடாப் பயணமும் விரிவாக எழுதப்பட்டுள்ளன. இவ்விரு நாட்டு அமைப்புக்களையும், அங்குள்ள வாழ்க்கை முறைகளையும் விபரித்துவிட்டு அவரின் பயணத்தில் தான் அனுபவித்தவற்றைக் கூறுகிறார். இப்பகுதி இரசிக்கக் கூடியதாகவும் நாடுகளின் வளங்களையும் அறிந்து கொள்ளக்கூடியதாகவும் இருப்பதோடு இப்பயணங்களை மேற்கொள்ளுவதற்கு ஆவலையும் தூண்டுகிறது.

இந்நூலிலே இடையிடையே கையாளப்பட்டுள்ள மண்வளச்சொற்கள் ஊன்றி நோக்குதற்குரியனவாகும்.

விநாயகப் பானை, குளுத்தி, சாட்டை, தெய்வம் ஆடுதல், உருவேற்றல், கட்டுதல், வெட்டுதல், கன்னிக்கால், வோட்டு, வோட்டுப் பள்ளம், பிள்ளைவளத்தான் குளம், முக்காலி, நிலைகட்டச்சுவர், சல்லி, கொட்டு, தீனா, காத்தடி, உமல், கொட்டைப்பெட்டி, துலாம், காடு வளைதல், கொத்துவேலி, தலைமழை, புரை, வாடி, மாப்பிள்ளைப்பாய், வட்டா, படிக்கம், மருங்கை, காறை, அரைஞான்கொடி, வளையல், கட்டிக்காப்பு, பூட்டுக்காப்பு, தண்டை, மின்னி, சாமி, சின்னச்சாமி, பெரியசாமி, கட்டைமிலாறு, கோலம், அவரிக்கம்பு, கடுக்கன், அரக்குப் புதைத்தல், திரவு எடுத்தல், ஏர்நாள், சீனிமா போன்றசொற்கள் எமது பிரதேசத்திலே பல வருடங்களுக்கு முன் பாவிக்கப்பட்டவையாகும். இச்சொற்களில் இருக்கும் கருத்துச் செறிவும், அது எழுப்பும் படிமங்களும் எமது பண்டைய வாழ்க்கையைத் துலாம்பரமாக உணர்த்திய காட்டிகளாகும்.

மட்டக்களப்புத் தமிழகத்திலே பன்னெடுங்காலமாகப் பேசப்பட்ட மண்வளச்சொற்கள் நமது பண்டைய வாழ்வைப் படம்பிடித்துக் காட்டக்கூடியதாய் விளங்குகின்றன. அத்தோடு வாழ்வாதாரத்தையும் முன்னோரின் வாழ்வியலையும் நயந்து நோக்கவும் வைக்கின்றன.

உதாரணமாக 'காத்தடி' என்பதை எடுத்துக்கொண்டால் தற்கால இளைஞர்கள் பைசிக்கிளுக்குக் காத்தடிப்பதைத்தான் நினைப்பார்கள். ஆனால் இச்சொல் பல வருடங்களுக்கு முதல் காவுகின்ற - தடி என்ற பொருளிலே காத்தடி உபயோகிக்கப்பட்டது. இது 5 அல்லது 6 அடி நீளமான வயிரமான சிலாகை வடிவானது. மத்தியில் நாலங்குல அகலமும் இரு தொங்கலும் இரண்டங்குல அகலமாக ஒடுங்கியும் அறுப்புகள் அந்தங்களில் உள்ளதாயும் இருக்கும். அக்காலச் சேனைப் பயிர்ச் செய்கைக்கு இத்தடி அவசியம். பத்துப்பதினைந்து மைல் தூரத்தில் காடுவெட்டி சேனைப் பயிர்ச்செய்கை செய்யும் விவசாயி, வீட்டுக்கு வரும் போது, காயவைத்த இறைச்சி, சோளன், குரக்கன் என்பவற்றை உமலிலே கட்டி காத்தடியில் ஒருபக்கம் கொழுவியும், மறுபக்கம் நாலைந்து தயிர்ப் பானைய உறியில் வைத்து கொழுவிக் கொண்டும் ஊர் பகுதியில் உள்ள வீட்டுக்குச் சுமந்து வருவது வாழ்க்கையாக இருந்திருக்கிறது. இப்பாரத்தை வாகனம் அற்ற காலத்தில் காத்தடியால் தோளிலே சுமந்து வருவதற்கு கட்டுமஸ்தான உடம்பும் அக்காலத்தவருக்கு இருந்திருக்கின்றது. இதனைச் சுமந்து குடும்பத் தலைவன் வந்தால் அந்தக்குடும்பத்



தலைவிக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்படும். அப்பொருட்களை அக்கம் பக்கம் விற்று பணம் எடுத்தே அவர்கள் சீவித்திருக்கிறார்கள். இந்த வாழ்க்கைக் கோலங்களை அந்தக் காத்தடி விளக்குகிறது. காத்தடி காலவரையில் மருவி காத்தாடி ஆயிற்று.

இதுபோலவே, கன்னிக்கால், உருவேற்றல், மாப்பிள்ளைப்பாய், சாமி, திரவு எடுத்தல், தீனா, மருங்கை, ஏர்நாள் முதலிய சொற்கள் காட்சிகளை விபரிப்பனவாகும்.


பொதுவாக கலைகளுக்குத் திட்டவட்டமான கோட்பாடோ, கொள்கையோ, வரையறையோ செய்யமுடியாது. அது காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்று வளரக்கூடியது. வளரவும் வேண்டும்.

கலை என்று சொல்கின்றபோது கலை ஆக்கங்கள் சொந்த அனுபவ வெளிப்பாடாக மிளிர வேண்டும். ஒருவர் பெற்ற அனுபவத்தை மொழி என்னும் ஊடகத்தினால் வெளியிடும் போது அவ்வனுபவத்தைப் படிப்பவரும் அவ் உணர்வை பெற்று அனுபவிப்பதோடு சிந்திக்கவும் செயல்படவும் தூண்டவேண்டும்.

ஆதலால் காலச்சுவடுகள் என்னும் சரித்திரநூல் வாசிப்பவரை நமது கடந்தகாலத்துக்கு இழுத்துச் செல்வதோடு எங்கள் மண்ணை நேசிக்கவும் செய்யும் என்று சொல்லிவைக்க விரும்புகிறேன். எமது எழுத்தாளர்களுக்கு வாசகர்களின் ஆதரவு வளரவேண்டும். அப்போதுதான் சிறந்த படைப்புகள் நம் மத்தியில் உருவாக வாய்ப்பு ஏற்படும். ■

**(துறை நீலாவணை மகா வித்தியாலயத்தில் 10.05.2009ல் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.)**

**வரவு 'கதிரவன்'**



கல்வி இலக்கிய கலை சஞ்சிகை -2

வெளியீடு : கதிரவன் கலைக்கழகம்

தொடர்புகளுக்கு : "பிரதம ஆசிரியர் தலைவர்
கதிரவன் கல்வி இலக்கிய கலை சஞ்சிகை"
கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு,
மட்டக்களப்பு, இலங்கை.
தொ.பேசி : 065-4903006, 077-4651732

## எனக்குப் பிடித்த என் கதை

**ஈழத்து மூத்த சிறுகதை எழுத்தாளர்கள் தங்களுக்குப் பிடித்த தாங்கள் எழுதிய கதைகளை இங்கே தருகிறார்கள்.**

மணிவிழா அகவையை 2001 ஜனவரி 25ம் திகதி அடைந்த ஈழத்தின் தலைசிறந்த படைப்பாளி **செங்கையாழியான் (கலாநிதி க.குணராசா) அவர்கள்** தான் எழுதியவற்றுள் தனக்குப் பிடித்த கதைகளில் ஒன்றை இங்கு தருகிறார். **'தெருவிளக்கு'** எனும் இக்கதை **'மல்லிகை'**, செப்டெம்பர் 1994 இல் வெளிவந்தது.






**க**டைத்தெருவுக்கு வந்த செல்வராசன் சந்தியில் அப்படியே நிலைகுத்தி நின்றுவிட்டான். அவன் விழிகள் இரண்டும் வியப்பால் விரிய, தாங்கமுடியாத அதிசயத்தால் அவன் வாயும் சற்று அகலத் திறந்து கொண்டது.

“சந்தியில் நிண்டு கொண்டு என்ன விடுப்பே பாக்கிறாய்? பாரத்தோடு சயிக்கிலில வாறன், விலகாமல் மாடுமாதிரி நடுச்சந்தியில. அங்கால போடா” என்று சத்தமிட்டு ஏசியவாறு ஒரு சயிக்கில் காரன் விறகுச் சுமையோடு அவனைக் கடந்து சென்றான். பின் கரியரில் ஆளுயரக் கம்புகளுக்கிடையில் அடுக்கிக் கட்டியிருந்த விறகுத்தடிகள் அவனை உராய்ந்தபடி சென்றன. ஏசியவன் விறகுச் சுமைக்குள் மறைந்துபோனான்.

அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சந்தியிலிருந்து விலகி நடந்தான். என்றாலும் அடிக்கடி திரும்பிப் பார்த்தபடி சென்றான். அவன் தனது பத்துவயதுக் கழிவில் இப்படியான ஒன்றை எங்கும் கண்டவனல்லன்.



மின்சாரக் கம்பத்தில் வளைந்த குழாய் நுனியில் மின் குமிழ்கள் தாம் தொங்கி ஒளிகொடுக்கும். பாதுகாப்பு வலயத்தின் நான்கு மூலைகளிலும் ஐசிஆர்சிகாரர் சிலுவை வடிவில் வானத்தை நோக்கி இரவில் ஒளிரவிடும் ரியூப்லையிற்றுகளும் மின்கம்பங்களில் தாம் உள்ளன. மின்கம்பங்களில் மின்சார விளக்குகள் தாம் எரியும். இதென்னவென்றால் கண்ணாடிக் கூடுக்குள் மேசைலாம்பு எரிகின்றது.

நான்கு ஆண்டுகளாக இருண்டு கிடக்கிற யாழ்ப்பாணத் தெருக்களுக்கு ஒளியூட்ட முன் வந்தவர்கள் யார்? இருட்டுக்குப் பழக்கப்பட்டுவிட்ட மக்கள். மாலை கவியத் தொடங்கும் போது கூடுகளுக்குத் திரும்பிவிடும் பறவைகள் போல வாழக் கற்றுக்கொண்டார்கள். ஏழு மணிக்குள் வெறிச்சோடிப்போகின்ற வீதிகள், கடைத்தெருக்கள், இரவில் விளக்கு ஏற்றாமலேயே படுக்கைக்குப் போகின்ற மக்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றது.

அவன் வீட்டு முடக்கில் இப்படியொரு தெருவிளக்கு இருந்தால் எவ்வளவு நன்றாகயிருக்கும்? முன்னிருட்டில் விறகுச் சுமையோடு சயிக்கிலில் வந்த சண்முகம் கம்பத்தோடு மோதி மண்டையை உடைத்திருக்க நேர்ந்திருக்காது. மாரிமுத்தர் கானுக்குள் விழுந்து காயப்பட்டிருக்க வேண்டி வந்திருக்காது.

செல்வராசன் வீட்டில் ஒரு சிக்கன விளக்கு இருக்கின்றது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நூறு ரூபாவிற்கு மேல் விற்கின்ற வேளையில் அரிக்கன் லாம்பும் மேசை விளக்கும் எரிக்கவா முடியும்? ஒரு கரண்டியில் பக்குவமாக மண்ணெண்ணெயை வார்த்து சிக்கன விளக்கின் பஞ்சுப் பொதியில் விட்டு நனைத்து, அதனுள் திரியைப் புதைத்து எரிக்கின்ற தொழில்நுட்பம் பல ஏழைமக்களின் குடிசைகளில் இரவில் சிறிது நேரமாவது மினுங்கல் வெளிச்சத்தைத் தர உதவியிருக்கின்றது. அந்த வெளிச்சத்தில்தான் செல்வராசன் இரவில் சிறுபொழுது பாடசாலைப் பாடங்களைப் படித்தும் வருகின்றான்.

அந்தக் கரையோரக் குடிசைகளின் கூரைகளை கிடுகுகளால் தான் வேய்ந்திருந்தார்கள். ஆனால் பகலில் வெயிலும், மழையில் வெள்ளமும், இரவில் வானத்து நட்சத்திரங்களும் எதுவிதச் சிரமமுமின்றி உள் நுழையக்கூடியவிதமாகக் கூரையில் ஈக்கில்கள் மட்டுந்தாம் இன்று இருக்கின்றன. அவ்வளவு செல்வந்தர்கள்.

வீட்டுக் கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல் கடலிற்குப் போன செல்வராசனின் தந்தையின் உடல் கூடக்கிடைக்கவில்லை. மண்டைதீவிலிந்து ஏவப்பட்ட ஷெல்லிற்குச் சிதறிக் கடலோடு கரைந்து காணாமற் போய்விட்டார்.

தாயும் அவனும் எஞ்சினர். இருவரும் பசிக்கு உண்டு சீவிப்பதே பெரும்பாடாகி விட்ட வேளையில், மண்ணெண்ணெய்யைக் குளிர வார்த்து மேசை விளக்கா எரிக்க முடியும்? ஒருசிக்கன விளக்கைத் தேடுவதற்கே அவன் சிரமப்பட்டு விட்டான்.

அவனது குடிசைக்கு நான்கு வீடுகள் தள்ளி தகரவேலை செய்யும் அப்பு ஒருவர் இருக்கிறார். அவர் வேலைவெட்டி இல்லாதவர். ஊர்ப் பையன்களுக்கு அவர் ஒரு தோழர். பட்டங்கள் கட்டிக் கொடுப்பது, குரும்பட்டியில் தேர் செய்து கொடுப்பது, உர பாக்கில் பள்ளிக்கூடப் பை தைத்துக் கொடுப்பது என்று எல்லா வேலையும் செய்து உதவுவார். தனிக்கட்டை. அவரிடம் செல்வராசன் போய்த் தயங்கி நின்றான்.

"என்னடா பேரா?"
"அப்பு, எனக்கொரு சிக்கன விளக்கு வேணும்....."
"செய்தால் போகிறது....போய் ஒரு ஜாம்போத்தல் எடுத்துவா" என்றார் அப்பு. செல்வராசன் முளையைக் கசக்கியபடி நின்றான்.
"என்னடா?"
"ஜாம் போத்தல் என்றால் என்ன?"
"நீ ஜாம் சாப்பிட்டிருக்கிறாயா?"

அப்பு தலையைச் சொறிந்தார். தன் தவறு அவருக்குப் புலப்பட்டது. கடற்கரையோரக் குடிசைகளில் வாழ்கின்ற ஏழைப்பையனிடம் ஜாம் பற்றி கதைத்திருக்கக் கூடாது. இன்றைய யாழ்ப்பாண இளம் பிள்ளைகளுக்குப் பல சங்கதிகள் தெரியாது.

"சிக்கன விளக்குப் பார்த்திருக்கிறாயா?"

"ஓம்....."

"அதுமாதிரிப் போத்தல் ஒன்று கொண்டுவா"

அப்படியொரு போத்தல் தேடி எடுப்பதிலுள்ள கஷ்டம் நான்கு நாட்களாக அலைந்து வீடுவீடாக விசாரித்த போதுதான் தெரிந்தது. சிலர் 'இல்லை' என்றார்கள். 'எங்காவது அகப்பட்டால் தங்களுக்கும் ஒன்று எடுத்துவா' என்றனர் சிலர். ஒரு வீட்டார் 'இப்ப ஜாம் போத்தல் சரியான விலை, ரேஸ்ரியே பத்து ரூபா கொடுக்கிறது' என்றார்கள். கடைசியில் அவனோடு படிக்கிற அன்ரனி ஒரு போத்தலைத் தன் வீட்டிலிருந்து எடுத்து வந்து கொடுத்து உதவினான்.

அப்புவிடம் எடுத்துச் சென்ற போது, "சரி... இப்ப ஒரு சயிக்கில் ரியூப் அடிக்கட்டை ஒன்று கொண்டு ஓடிவா" என்றார். அவன் சந்திக்கடை இராசதுரையிடம் ஓடிச் சென்றான். அவர் சயிக்கில் கடை வைத்திருந்தார்.

"அண்ணை... ஒரு ரியூப் வால்ப் அடிக்கட்டை"



"அது எங்கயடா இப்ப கிடைக்கிறது? சிக்கன விளக்கு வந்ததும் ஒண்டும் கடையில இருக்க விடுகிறான்களில்லை"

"அண்ணை.... நான் இராவில படிக்க....."

இராசதுரை அவனை ஏறிட்டுப் பார்த்தார். செல்வராசனின் விழிகள் அவரிடம் இரக்கத்தோடு யாசித்தன. படிக்கக் கேட்கின்றான்.

"பொறு..." என்று எழுந்து சென்று பழைய சயிக்கில் சாமான்கள் போட்டிருந்த பெட்டியைக் கிளறி ஒரு ரியூப் அடிக்கட்டையை எடுத்துவந்து அவனிடம் கொடுத்த போது செல்வராசனின் விழிகள் நன்றியுடன் பெற்றுக் கொண்டன.

அப்பு அதன்பின்னர் வேகமாகச் சிக்கன விளக்குச் செய்வதில் ஈடுபட்டார். அவன் அவர் அருகில் அமர்ந்து அவதானமாகப் பார்த்தான். கம்பியொன்றினைப 'ப' வடிவில் வளைத்து ஜாம்போத்தலினுள் வைத்து ஆழம் பார்த்தார். ஒன்றரை அங்குலம் போத்தலின் அடித்தளத்திலிருந்து இருக்கவிட்டு கம்பியை போத்தல் விளிம்பில் செவியாக மடித்துவிட்டார். வால்ப் கட்டையில் பஞ்சுத் திரியை நுழைத்து அதனைக் கம்பியின் 'ப' நடுவில் பிணைத்தார். பஞ்சைப் போத்தலின் அடித்தளத்தில் இட்டார். 'ப' வடிவக் கம்பியைப் போத்தலினுள் வைத்தார்.

"பொடி, ஓடிப்போய் அடுப்படிக்கை மண்ணெண்ணெய் போத்தல் இருக்குது, கவனமா எடுத்து வா"

அவன் எடுத்துவந்த போத்தலிலிருந்த மண்ணெண்ணெயில் ஒரு கரண்டியளவு கவனமாகப் பஞ்சில் விட்டார்.

"இது காணுமே, அப்பு?"

"ஒரு மணித்தியாலம் வடிவா எரிக்க இது காணும். கனக்க விட்டிடாதை. திரியும் பஞ்சும் எரிஞ்சிடும். இந்தா எடுத்துக் கொண்டு ஓடு. இராவில படி....."

அவன் சிக்கன விளக்கைக் குதூகலத்துடன் வீட்டுக்கு எடுத்து வந்தான். அதன் மங்கிய வெளிச்சத்தில் அவன் இரவில் ஒழுங்காகப் படித்தான்.

அதில் படிப்பது கடினமாக இருந்தது.

"கொஞ்சம் பெரிய விளக்கு இருந்தால்"

மின்கம்பத்தில் எரிந்தபடி தொங்கிய தெருவிளக்கு அவன் ஆசைக்குத் தூபமிட்டது. அப்படியொரு மேசைவிளக்கிருந்தால் நன்றாகவிருக்கும். இரவிரவாகப் படிக்கலாம். கல்வீட்டுக் கணேசனைக் கூட படிப்பில் வெல்லலாம்.

கடைத்தெருவில் வாங்கிய பாணைத் தாயிடம் கொடுத்து விட்டு அவன் அப்புவிடம் ஓடிச் சென்றான். அவன் ஓடி வருகிற

வேகத்தைக் கவனித்த அப்பு, "என்னடா பொடி? என்ன? என்ன? எங்கையாவது குண்டு போட்டிட்டான்களே?" என்று படபடத்தார்.

"இல்லை அப்பு. கடைத் தெருச் சந்தியில மின்கம்பத்தில....."

"ஆரையும் சுட்டுக் கட்டியிருக்கிதோ?"

"விசர்...அதில லயணை அப்பு. இப்ப அப்படி நடக்கிறதோ?" என்றவன் தான் கண்ட தெருவிளக்கைப் பற்றி விபரித்தான்.

"நல்ல வெளிச்சம் அப்பு"

"ஓ..." என்று அப்பு பெரிதாகச் சிரித்தது அவனுக்கு எரிச்சலைத் தந்தது.

"அந்தக் காலத்தில எங்கட ஊருகளில இப்படித்தான் சந்திக்குச் சந்தி, கோயிலுக்குக் கோயில் தெருவிளக்கு இருக்கும். எங்கட வீட்டிற்கு முன்னிருந்த வயிரவர் கோயில் தெரு விளக்கை நான் தான் கொழுத்துகிறது" அவர் சொல்வதை அவனால் நம்பமுடியவில்லை.

"உங்கட காலத்தில இப்படியோ?"

"ஓமென்னிறன். நம்பாமல் கேக்கிறாய்?"

"எப்படியிருக்கும்?...."

"ஆளுயரத் தூணின் உச்சியிலே கண்ணாடிக்கூடு. அதுக்குள்ள விளக்கு...."

"மேசைலாம்போ?"

"இல்லையடா பொடி. சிக்கன விளக்கு மாதிரி தேங்காயெண்ணெயில் எரியிற விளக்கு. தேத்தண்ணி குடிக்கிற கிளாசில செய்தது..... உந்த லையிற்று வந்தவுடன் அப்படியான தெரு விளக்குகள் எல்லாம் இல்லாமற் போச்சுது. இப்ப திரும்பவும் தெருவிளக்கு வந்திட்டுது. அப்ப நாங்க ஒரு ஐம்பது அறுபது வரியம் பின்னால் போயிட்டம்"

"போ, அப்பு. உங்கட காலத்தில இப்படிக் குண்டு போட்டவன்களே? ஷெல் அடிச்சவங்களே? ஏகே 47 இருந்ததே? வீதியில, வீடுகளில, கோயில்களில ஆக்கள் உடல் சிதறிக் கிடந்தவையே?"

அப்பு பேரனை ஆழமாகப் பார்த்தார்.

"அப்ப பொடி, நாங்க இன்னமும் ஒரு ஆயிரம் வரியம் முன்னால போயிட்டம் என்கிறாய்?"

அவர் சொன்னவை அவனுக்கு விளப்பமாகவில்லை. மௌனமாகக் கடற்கரைப் பக்கம் பார்த்தான். கடற்கரை வெறிச்சிட்டுக் கிடக்கின்றது. எப்படியிருந்த கடற்கரை? சோகம் கப்பிக் கிடக்கிறது.

வாழ்க்கையே சுமையாகிவிட்டது. உணவு முத்திரைகள் இல்லாவிட்டால் பல நூறு குடும்பங்கள் வாழ்ந்தவிடத்தில் புல் முளைத்திருக்கும். அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. அவை இருந்தாலும் அவற்றை வாங்க



ஏழை பாழைகளிடம் பணமில்லாத அவலம்.

"அம்மா, இம்முறை பங்கீட்டுக்கு மூன்று லீற்றர் மண்ணெண்ணெய் கொடுக்கினமாம். சங்கக் கடை மனேச்சர் போட் எழுதிப் போட்டிருக்கிறார். சீனியும் கொடுக்கினமாம்" என்று முந்தாநாள் செல்வராசன் தாயிடம் செய்தி கூறினான். அவள் மனதிற்குள் அழுதுகொண்டாள்.

"மலிவெல்லோ அம்மா... வெளியில மண்ணெண்ணெய் லீற்றர் நூற்றிப்பத்து. இது இருபத்தைந்து"

"அதுக்கும் வாங்கக் காசு வேணுமே ராசா? சயிக்கில்கடை இராசதுரை காசு தாறன் எண்டவர். வாங்கி அவருக்குக் கொடுத்தால் ஒரு அரை முக்கால் லீற்றர் சும்மா தருவார்" அவன் திக்கித்துப் போய் நின்றிருந்தான்.

அப்பு அவனை உசுப்பினார்: "என்னடா... யோசித்துக் கொண்டு நிக்கிறாய்?"

"ஒண்டுமில்லை, அப்பு" என்ற அவன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"விசயத்தை சொல்லு பொடி..." அவன் அவரை வியப்புடன் பார்த்துவிட்டுக் கேட்டான்.

"அப்படியொரு விளக்குச் செய்யவேணும் அப்பு. அதுக்கு என்னென்ன வேணும்?"

"அப்படி எனக்குச் செய்யத் தெரியாது. அதுக்கு பாலசிங்கத்தைத்தான் கேக்கவேணும்"

"அது ஆர் பாலசிங்கம்?"

"அவர்தான் எங்கட மாநகரசபை ஆணையாளர். அவர்தான் தெருத் தெருவா இப்படி விளக்கு வைக்கிறார்" என்று அப்பு பெரிதாகச் சிரித்தார்.

"அப்படி எல்லாத் தெருவிலும் வைத்தால் என்ன?"

"ஆர் வைக்கிறது?...."

"எங்கட வீட்டிற்கு முன்னால இருக்கிற மின்கம்பத்தில ஒரு விளக்கு இருந்தால்.... முந்தாநாள் மாரிமுத்தர் கச இருட்டில றோட்டுக் கானுக்குள்ள விழுந்திட்டார். அதுக்கு முதல்நாள் விறகுச் சுமையோட வந்த சண்முகமண்ணை பிரண்டு விழுந்து பாவம் அப்பு சரியான காயம். எல்லாவிடத்திலும் தெருவிளக்கிருந்தால் சனத்துக்கு நல்லது. என்ன அப்பு?" என்றான் சிறுவன். அப்பு அவனைக் கவலையோடு பார்த்தார்.

அவன் தொடர்ந்தான். "அந்தக் காலத்தில வயிரவர் கோயில் முகப்பில விளக்குக் கொழுத்தின மாதிரி நீங்களும் இப்ப தெருவில கொழுத்துங்களன் அப்பு"

அப்பு சிந்தனையில் ஆழ்ந்தார். செல்வராசன் தன் வீட்டிற்கு ஓடிப்போவதை பார்த்தபடி அவர் நின்றிருந்தார்.

அவன் சென்றதன் பின்னரும் அவன் வீசிய சொற்களின் வாசனை அவ்விடத்தில் நிரம்பியிருப்பதாகப்பட்டது. அவர் படுக்கைக்குப் போகும்வரை அவன் கூறிவிட்டுச் சென்றவற்றையே எண்ணமிட்டார். 'நல்ல பொடியன், கெட்டிக்காரனா வருவான்'

வாங்கில் கிடந்தவாறு இருளை ஊடுருவிப் பார்த்தார். அப்புவுக்கு நித்திரை வரவில்லை. தன் வாங்கிலிருந்து எழுந்து வெளியில் வந்தவர் செல்வராசனின் குடிசைப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார். அவர் அப்படியே விறைத்துப்போய் சிலையாகிவிட்டார். உண்மைதானா?

செல்வராசனின் குடிசைக்கு எதிரிலிருந்து தெரு மின்கம்பத்தில் சிக்கன விளக்கொன்று மினுங்கிக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. அணைந்துவிடும்போல ஒளி அடங்கி மினுமினுத்தது. அவர் அடுக்களைக்குள் போய் மண்ணெண்ணெய் போத்தலைக் கையிலெடுத்துக் கொண்டார். செல்வராசன் ஏற்றி வைத்த தெருவிளக்கினை நோக்கித் திருப்தியுடன் நடக்கத் தொடங்கினார். ■


## விரைவில் இலண்டனில் ஈழத்து தமிழ் நூற் கண்காட்சி - 2009

ஈழத்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும். அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச்சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப்பதிவுகள், சிறுசஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு... என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புகளுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி,ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம். அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புக்களையும் அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்கு தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகட்கு : **R.Mahendren** (முல்லை அமுதன்)
34,Red Riffe Road,
Plaistow,
London,
E13OJX.
Tel : 02085867783
E.mail : mullaiamuthan 03@hotmail.co.uk




# ஒரு படைப்பாளனின் மனப் பதிவுகள் - 6

■ கவிவலன்

## மகரந்தம் ஏந்தாத சிறகுகள்

கவிதையைக் கட்டி வளர்க்க வேண்டியவர்கள் யார்?
கவிதை, கௌரவம் பெற உழைக்கவேண்டியது யாருடைய பொறுப்பு?

கவிதையைக் கட்டி வளர்க்கவேண்டியது கவிஞர்களது கடமை. கவிதை கௌரவம் பெற உழைக்கவேண்டியது கவிஞர்கள், கவிதை எழுதுபவர்களது பொறுப்பு.

இப்போதெல்லாம் கவிதை எழுதுபவர்களால் கவிஞர்களால், கவிதை கவிதையாகக் கணிக்கப்படுவதில்லை, கவிதை கவிதையாகக் கௌரவிக்கப்படுவதில்லை. மரபுக்கவிதை எழுதுபவர்கள் புதுப்பாணிக் கவிதைகளைப் புறக்கணிக்கிறார்கள். புதிதாக எழுதுபவர்கள் மரபுக் கவிதைகளை மறுதலிக்கிறார்கள். பொதுவாக கவிதை கவிதையாகப் பார்க்கப்படுவதில்லை. கவிதை கவிதையாக நோக்கப்படுவதில்லை. கவிஞர்களுக்குள்ளேயே கயிறிழுப்பு. மரபா, புதிதா என்ற மல்லுக்கட்டு.

பாவம் கவிதை.
இந்தக் கூத்துக்களுக்குள், எப்படியெல்லாமோ உத்தரிக்கிறது கவிதை, எப்படியெல்லாமோ சித்திரவதைப்படுகிறது கவிதை. உண்மையாகவே மிகப் பரிதாபகரமான நிலையில் இன்றைய தமிழ்க்கவிதை.

கவிதையை, கவிதையாகப் பார்க்கின்ற மனப்பான்மை கட்டாயமானவொரு பண்பாடாகவே கடைப்பிடிக்கப்படவேண்டும். அது மரபென்றாலும் சரி, புதிதென்றாலும் சரி, அலகுகள் மாறுபடலாம், வெளிப்பாட்டு முறைகள் வேறுபடலாம். ஆனால், கவிதைக்குரிய காம்பீர்யம், கவிதைக்குரிய செழுமை, கவிதைக்குரிய அழகு நிறைந்திருக்குமென்றால், அது கவிதை தான். அதைக் கண்ணியப்படுத்தவும், கௌரவப்படுத்தவும் ஏன் நாங்கள் பின்நிற்க வேண்டும்?!

கவிதையை கவிதையாக ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை, கவிஞர்கள் மத்தியிலே கட்டியெழுப்பப்படவேண்டும். அதை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் இன்று கவிஞர்களிடையே, கவிதை எழுதுபவர்களி

டையே இந்த உணர்வோ, உடன்பாட்டுக்கேதுவான உறவோ மருந்துக்கும் கிடையாது. தாங்கள் எழுதுவது, தாங்களால் பின்னப்படுவது மட்டுமே கவிதையென்பது இவர்களது கருத்து, இவர்களது வாதம், மற்றவர்களெல்லாம் மண்ணாங்கட்டிகள். அந்த மண்ணாங்கட்டிகள் எழுதுவதெல்லாம் அறுவடைகளேயல்ல, என நினைத்து வீம்புக்கு வீசியெறிந்து பேசுவது இவர்களது போக்காக இருக்கிறது.

இந்தக் கவிதைக்காரர்கள் எல்லோருமே தங்களை ஒவ்வொரு சிகரங்களாகவும், மிகப்பெரும் உயரங்களாகவுமே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நிரூபிக்கவும், ஆணியடித்து நிறுவவும் பக்கப்பாட்டுகள் சிலதைச் சேர்த்துக் கொண்டு பவனிவருகிறார்கள். கூட்டங்களை நடாத்துகிறார்கள், கோஷிக்கிறார்கள்.

விளக்கிற்கு அதனடியில் படிகின்ற நிழல்தெரிவதில்லை. அதன் பார்வை எப்போதுமே ஒளியிலும், திரியிலுமே ஒன்றியிருப்பதுதான் அதற்கான காரணங்களாகும். நிழல்களைப்பார்த்து..தங்களது நிறையையும், குறையையும் ஏற்றுக்கொள்கிற பக்குவம் இவர்களுக்குள் ஏற்படவேண்டும். உண்மையாக நிழல்கள் நிழல்களே; நிழல்கள் வெளிச்சங்களில்லை. அந்த நிழல்களைப் போன்றே தமது பலவீனங்கள் என்பதை, இவர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். புரிந்துகொண்ட பின்னரும் தங்களைத் திருத்திக்கொள்ளமாட்டோமென அடம்பிடிக்கிறார்கள். இப்படி அடம்பிடிக்கும் இவர்கள், மிக அதிகம்பேர். இவர்கள்தான் கவிதைப் பெரும்பரப்பைச் சாக்கடையாக்கிக் கொண்டிருக்கும் கவிதா மேதாவிகள். உண்மையாக. இவர்களே கவிதையாக கவிதைக்களனியில் முளைத்துள்ள களைகள். உண்மையாக இவர்களே கவிதையாக அல்லது கவிதைபோல எழுதுகிற கவிஞர்கள். கவிதை வெறும் மளிகைக் கடைப் பொட்டலத்தாளாக இல்லாமல் மகரந்தம் ஏந்திய சிறகுகளாக இருக்கவேண்டும். 'இலக்கிய உணர்வோ, விஷயஞானமோ, பண்பாளனுக்குரிய பொறுப்போ எதுவுமில்லாமல் கவிஞனாக முடியாது' என்ற புதுக்கவிதை நெறியாளர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுடைய கருத்து எவ்வளவு அர்த்தமுள்ளது. இதை இவர்கள் தங்களது கருத்திற்கெடுக்கவேண்டும்.

கவிதைபோல கவிதை எழுதுகிற கவிஞர்கள் இப்படியான பெரியோரது கருத்துக்களைப் பார்க்கவேண்டும், பார்த்து, படித்து தங்களைத் திருத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆனால் இந்தக் கவிதா புருஷர்கள் முயற்சிப்பதில்லை. இவர்களைத் திருத்தமுடியாது. இவர்கள் திருத்தம் பெறவும் மாட்டார்கள். ஏனெனில் இவர்களிடம் அந்தப் பக்குவமில்லை. கவிதை பற்றி, கவிதைகள் பற்றிய கருத்துக்களை அறிந்து கொள்ளுகின்ற ஆர்வமில்லை. இவர்கள் பிஞ்சியிலே முற்றிப் பிழையாகப்போன வெம்பல்கள்.



அதுமட்டுமில்லாமல் இப்போது பல்வேறு சித்தாத்தங்கள், பலவகையான தியறிகள், கோட்பாடுகளென்று ஐம்பத்தெட்டு வேறுபாடுகள் கவிதைப் பரப்பிற்குள்... கவிதையாளர்களுக்குள் ஊடுருவி, காலூன்றிவிட்டன. எங்கு பார்த்தாலும்-நாலு நாலுபேராக ஒரு வட்டம், ஒரு அவை, அல்லது ஒரு குறூப்புக்குள் அணிசேர்ந்திருக்கிறார்கள். புதிய புதிய சித்தாத்தங்களை கோட்பாடுகளை அறிமுகப்படுத்துகிறார்கள். இந்த சித்தாந்தங்களை விலாசிக்க ஒரு பத்திரிகை – சஞ்சிகையை அவர்களே வெளியிடுகிறார்கள். கைதட்டி ஆதரிக்க, ஆர்ப்பரிக்க ஒரு சிஷ்யப்பிள்ளைகள் கூட்டத்தை தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். இதுதான் இன்றைய கவிதையுலகத்தின் உண்மையான தோற்றம்.

'ஐரோப்பிய மண்ணில் எப்போதோ செத்துப்போய் பிணமாகிவிட்ட பின்நவீனத் துவ இலக்கியக்கோட்பாடுகளை இங்கு சிலபேர், நகைகள் பூட்டி அழகுபார்க்க முயற்சிக்கிறார்கள். மக்களுக்குப் புரியாதவையாகவே நீர்க்குமிழிபோன்று வெளியாகும் இந்த எழுத்துக்கள், படைப்புகள் எப்படி வாசகனைச் சென்றடையும், ஏற்றுக்கொள்ளப்படும்' என்று எங்களது சிறுகதைப் படைப்பாளர் நீர்வை பொன்னையன் குறிப்பிடுவதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இது ஒரு ஆரோக்கியமான நடைமுறையில்லை. இது ஒரு ஆக்கபூர்வமான செயற்பாடும் இல்லை. இதிலெல்லாமிருந்து கவிதையை மீட்டெடுத்து, நாளைய வாசகனுக்கு சரியான முறையில் கையளிக்கவேண்டிய பாரிய பொறுப்பு, கவிதை இலக்கியத்தின்மேல் அக்கறையுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்களது கடமை, அவர்கள் கைகளிலேயே, கவிதை திருத்தம் பெறுவதோ, சரியான திசைவழியில் பயணம் செய்வதோ தங்கியிருக்கிறது.

பாருங்கள்,... ஆக்கங்களைவிட, அதை ஆக்குபவர்களையே முதன்மைப் படுத்துகிற அர்த்தமற்றபோக்கு இன்று முன்னெடுக்கப்படுகிறது. இது ஒரு பிழையான அணுகுமுறை, பிழையான செயற்பாடு...., இந்தச்சமாச்சாரம் *(Subject)* நமது கவிஞர்கள் எல்லோருக்குமே தெரியும். ஆனாலும் பொதுவாக எல்லோருமே கும்பலிலே கோவிந்தா போடும் கூட்டத்திற்குள் ஒருவராகத்தான் கருமமாற்றுகிறார்கள். அப்படி கருமமாற்றத் தம்மைத்தாமே பழக்கிக் கொண்டுள்ளார்கள். இதையாருமே மறுக்கமாட்டார்கள், முரண்படமாட்டார்கள்.

கவிஞனா?..... கவிதையா?......

இதுதான் இன்று நமக்குமுன்னே எழுந்து உட்கார்ந்திருக்கின்ற பிரச்சனை. எப்படி பூசி, மெழுகி, அலங்காரமாகச் சொன்னாலும் இதுதான் இன்று நமக்குமுன்னே எழுந்து உட்கார்ந்திருக்கின்ற பிரச்சனை. உட்கார்ந்திருக்கின்ற

பிரச்சினை என்பதைவிட, ஓங்கி மிச்சம் உயரத்திற்குப் போயிருக்கின்ற பிரச்சினை. இதைப்பற்றி, இந்தப் பிரச்சினை பற்றி ஒருவருமே பேச விரும்பு வதில்லை. பேசுவதற்காக ஒரு முடிவுகாண்பதற்காக கூடுவதுமில்லை. எல்லோரிடமும் வித்துவச் செருக்கும், தன்னாதிக்கமும் தலைக்குமேல் ஓங்கி வளர்ந்திருக்கின்றது. நீயா, நானா என்ற கயிறிழுப்பு தொடர்கிறது.

மூத்தவர்கள், முதிர்ந்தவர்களாவது இது பற்றி ஏதாவது ஆலோசனைகளைச் சொல்வார்களென்று பார்த்தால் அனேகமாக அவர்களும் மௌனம் சாதிக்கிறார்கள், ஒதுங்கிக் கொள்ளுகிறார்கள். இன்னும் சில மூத்த கவிஞர்கள், சுயமாகக் கருத்துக்களை முன்வைக்கப் பயந்தோ என்னவோ தெரியவில்லை, பட்டும் படாமலுமே பேசக்கற்றுக்கொண்டிருக்கிறார்கள். தைரியமாக எதையும் நறுக்குத் தெறித்தாற்போல் சொல்வதற்குப் பின்னடிக்கிறார்கள். சிலர் யார் யாருக்கோவெல்லாம் பக்கவாத்தியமாக எதையெதையோ ஒப்புவிக்கிறார்கள், ஆனால் எப்படித்தான் சொன்னாலும், இதுதானே ஐயா.... உண்மையான நிலைமை, இதுதானே இன்றுள்ள நடப்பியல்.

இந்த உண்மையைச் சொன்னால் சில பேருக்கு நெற்றிப்பொட்டிலடித்தது போல கோபம் பொத்துக்கொண்டுவரும். ஆனால் இதற்கான தீர்வுகாண மட்டும் ஒன்றுசேரமாட்டார்கள். இந்த நசிவுப்போக்குகளால், காட்டாறுபோல அணையுடைத்து பொங்கிப்பெருகிவந்த இலங்கைக் கவிதை எங்களது கவிதைவளம் சகதிக்குள் கிடந்து முக்குளிக்கிறது. அரை உடலாய்த் தேய்ந்து தத்தளிக்கின்றது.

இலங்கையிலுள்ள ஒரு சஞ்சிகை, சில நாட்களுக்கு முன்னர் நம்முடைய ஒரு கவிஞரானவரை தனது இதழுக்காகப் பேட்டியெடுத்திருந்தது. அதில் அந்தப்பேட்டியைக் கொடுத்திருந்த கவிஞரானவர் கொஞ்சப்பேரைக்குறிப்பிட்டு இவர்கள்தான் இலங்கையின் முன்னணிக் கவிஞர்கள், கவிதை உச்சங்களென்று சொல்லியிருந்தார். அந்தக் கவிஞரானவர் சொன்னது போலச் சொன்னால்.... ***Major Poets,*** மஹாகவி, நீலாவணன். இவர்கள் ***Major Poets*** தான். இதில் எவருக்கும் கருத்து முரண்பாடு இல்லை. ஆனால் இதற்குப்பின் குறிப்பிடப்பட்டவர்கள் எல்லோருமே இந்தக் கவிஞரானவருடைய குழுவை, குறூப்பைச் சேர்ந்தவர்கள். இந்தக் கவிஞரானவரும், அப்படியொன்றும் பெரிதாக எந்த மாங்காயோ, புளியங்காயோ பறித்தவராகத் தெரியவில்லை.

இவரைப் பேட்டியெடுத்த சஞ்சிகையும், இவர்களது குழுவால் வெளியிடப் படுகிற, இவர்களானவரை உச்சங்களென்று முரசறைகிற அவர்களது அணியுடைய மெய்ஞானபோத பிரச்சார ஏடுதான். அந்தக் கவிஞரானவர் சரி, அல்லது அவர் குறிப்பிட்ட பெரிய கவிஞர்கள் சரி அவர்களெல்லாம்...



கவிக்கோ சொல்வதுபோல சுய அனுபவ வெளிச்சமோ, கவித்துவமோ, வடிவப் பிரக்ஞையோ இல்லாத சாதாரண கச்சாப் பொருள்களும், துண்டு துக்கடா நகைச்சுவைத் துணுக்குகளும் கவிதையென நினைத்து எழுதுகிற மக்களுக்குப் புரியாத பாஷைகளில் கவிதை பின்னுகிறவர்கள்தான். அப்படி இந்தச் சிகரங்கள் எழுதிய இமாலயப் படைப்பு என்னடாவென்று, ஓடியாடித் தேடிப்பார்த்தால் எல்லாம் சொல் விளையாட்டுக்கள், புரிந்துகொள்ளமுடியாத வார்த்தை முடிச்சுகள்தான்.

இவர்களால் எழுதப்பட்ட கவிதைகளை எவ்வளவு பாடுபட்டும் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை. எங்களது ஊர் பகுதிகளில் சண்டைபோடும் போது, ஊர்ச்சனங்கள் பாவிக்கும் தூஷணங்களைக்கூட இவர்கள் கவிதா வாக்கியங்களாக, கவிதைத் தேடல்களாக பதிவு செய்திருக்கிறார்கள். இதுதான் இவர்கள் கண்டுபிடித்த புதுமை, இதுதான் இவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட படிமப்பாஷை, இங்கே கவிதையுமில்லை, கச்சடாவுமில்லை.

ஆனால் அந்தக் கவிஞரானவர் தனது வட்டத்தைச்சேர்ந்த இவர்களைத் தான் பெரிய கொடுமுடிகள், *Major Poet*கள் என்றும், சில ஆங்கில வார்த்தைகளையும் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

பொதுவாக இந்த மேதைகள் யாருமே கவிதையுலகில், தங்களது எழுத்தாண் மையால், ஓங்கியெழுந்து காலூன்றியவர்களில்லை. எங்களது பத்திரிகை உலகமும், கவிதையைக் கௌரவிக்கும் நோக்கில் அது தரமா, சிறப்பானதா என்று பாராமல், கவிதைகளைப் பிரசுரிக்கிறது, சந்தர்ப்பம் கொடுக்கிறது. உண்மையாகவே, அது கவிதைக்குக் கொடுக்கும் சிறப்பேயன்றி, கவிஞருக்குக் கொடுக்கும் கௌரவமல்ல. ஆனால், இதை முழுக்க, முழுக்க பிழையாக விளங்கிக்கொண்ட அரைகுறைகள் கவிதையுலகையே குழப்பியடித்துக் கொண்டிருக்கிறது.

கவிஞனுக்கு முகமும், முகவரியும் கவிதைகளே! அந்தக் கவிதை இலட்சியத்தை, இலட்சிய உலகத்தைச் சுட்டிக்காட்டும் திசைகாட்டியாக, பாதையின் வெளிச்சமாக, உற்சாகம் ஊட்டும் வழித்துணையாக, இளைப் பாறும் சத்திரமாக, பாதங்களின் காயத்தை ஆற்றும் மருந்தாக, கண்ணீர் துடைக்கும் கையாக இருக்க வேண்டும்.

ஆனால், நமது கவிதை எங்கேயிருக்கிறது?
இந்தக் கவிதை 'மெக்கானிக்குகள்' நமது கவிதையை எங்கே தள்ளிக் கொண்டுபோகிறார்கள்?

இலக்கில்லாத பயணம்.
தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்
நாம் எங்கே நின்றுகொண்டிருக்கிறோம்?...

இது பற்றி ஆழமாகச் சிந்திக்கவும், செயல்படவும் ஆரம்பிக்க வேண்டும்.
கவிதை அசிங்கப்பட்டுக்கிடக்கிறது.
கவிஞனே!.....
கவிதை அன்னையைக் காப்பாற்ற எங்களோடு இணைந்து வா, இணைய வா!

■ மீண்டும் சந்திப்போம்.


# வாழ்த்துகின்றோம் !



*30.05.2009 அன்று நடைபெற்ற கிழக்குப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் இளங்கவிஞரும் ஓவியருமான செங்கதிரின் ஓவியர் சிவராஜா மௌனேஷ் அவர்கள் கலைமாணிப் பட்டம் பெற்றார். இவர் கிழக்குப் பல்கலைக்கழக கலை, பண்பாட்டுப்பீட மாணவரவை வெளியீடான* **'வெளி'** *(ஆண்டு இதழ்)யின் ஓவியருமாவார். கலைமாணிப்பட்டம் பெற்ற சிவராஜா மௌனேஷ் அவர்களைச்* **'செங்கதிர்'** *வாழ்த்தி மகிழ்கின்றது. இவரது கவிதையொன்றும் இங்கே இடம்பெறுகின்றது.*

## உன்னை எதிர்பார்த்து!.....

*- சிவராசா மௌனேஸ் -*



நீ என்னில் பாதி
உன் வரவை
எதிர்பார்த்து
எதிர்பார்த்து
ஏமாந்து போகிறேன்.
தினமும் நான்
என் கண்ணாடியில்
என்னைப்பார்த்து
உன்னை காண்கிறேன்.
சந்தோஷம்
அளவு கடந்து
போகின்றது.

உன்னை
வார்த்தைகளில்
வடிக்கும்போது
வெறுமையாய்
கிடந்த
வெள்ளைப்
பேப்பரை
உயிர்பெறச்
செய்கின்றேன்.
உன்னை
உச்சரித்து
உச்சரித்து.



செங்கதிரோன் எழுதும்



# விளைச்சல்

15 குறுங்காவியம்

(கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சி...)

**பொன்னம்மா மகிழ்ச்சி**

கனகம்மா களிப்பில் அன்னம்
கருவுற்ற சேதி சொல்ல
மனமிக மகிழ்ந்த பொன்னு
மச்சாளை இருத்திப் பாயில்
சுணங்காமல் குசினி சென்று
சுடுதேநீர் கொணர்ந்து வைத்து
மனங்கோணா வண்ணம் மச்சாள்
மற்றெல்லா வகையும் செய்தாள்.

ஒரு மாதம் நிறைந்த அன்னம்
உதிரமோ மிகத் திரண்டாள்.
இரு மாதம் முடிந்த பின்னர்
இருவிழிகள் வெண்மையுற்று
முருகுடை முகமோ மூன்றில்
முழுவதும் வெளுக்கக் கண்டு
உருகியே நின்றாள் பெத்தா
உண்மையைப் பெற்றாள் இல்லை.

## பெத்தாவின் மகிழ்ச்சி

எள்ளினாள் பெத்தா "அன்னம்
என்னடி வயிற்றில் இன்னும்
புள்ளயக் காணோம்" என்று.
புளிமாங்காய் தின்னக்கண்டு
"கள்ளி நீ அன்னம்" என்று
கத்தினாள்; பின்னர் கையால்
அள்ளினாள் அன்னம்மாவை
ஆசையில் முத்தமிட்டாள்.

## கருவளர்ந்தது

மசக்கையில் ஓர்நாள் அன்னம்
மயங்கியும் வீழ்ந்தாள்; பெத்தா
"இசக்கமே இல்லாப் பிள்ளை
எப்படித் தாங்குவாளோ?"
கசக்கியே கண்ணீர் மல்க
கவலையும் பட்டாள்; தொட்டு
உசுப்பினாள். எழும்பி நின்றே
ஓங்காளம் எடுத்தாள் அன்னம்.

வான்முகில் வளாது பெய்து
வயற்காடு செழித்தாற்போல
கோன்அவள் கொழுநன் செல்லன்
கொட்டிய அன்பினாலே
ஊனொடு உள்ளம் ஒன்றாய்
உவகையில் உப்பி மாதம்
நான்கினைக் கடந்த அன்னம்
நாவுக்கு ருசியாய்க் கேட்டாள்.



அன்னம்மா பிள்ளைத்தாச்சி
அவளுக்குச் சோட்டை என்றே
பெண்ணவள் சொந்தக்காரர்
பேராசையோடு கூடி
பண்ணினார் பலகாரங்கள்
பரிவாரத்தோடு சேர்ந்தே
அன்னத்தின் வீடு நோக்கி
அணிஅணியாகப் போனார்.

(இன்னும் விளையும்)

## ஒற்றுமைக் கீதம் ஒலிக்கட்டும்

இந்துமுஸ்லிம் கிறிஸ்தவர்கள் ஒரு காலத்தில்
இணைந்தொன்றி வாழ்ந்தவர்கள் இடைக்காலத்தில்
பந்தமறுந் துற்றதொன்ன பவமோ நெஞ்சப்
பகைமைகொண்ட நிலைதோன்றிப் போனதையோ
குந்தகத்தின் காரணத்தைத் துரிவிடாது
கடந்தவற்றை மனம்பொறுத்து எதிர்காலத்தில்
சொந்தமுற வேண்டும்நாம் முன்போலுற்ற
தோழமையைப் பேணிடுதல் வேண்டுமாமே.

இனத்தளவில் வெவ்வேறு என்றிட்டாலும்
எழுதுவதும் பேசுவதும் தமிழைத்தானே
அழுத்தமாக மனம்பதிக்க வேண்டும் இஃதை
அடுத்தவர்கை ஓங்குமுன்னே அறிவுமிக்கோர்
பிடித்துக்கரம் அழைத்துமுன்னே செல்லல் வேண்டும்
அடித்தகையே அணைத்திடுதல் வேண்டும் கண்ட
அவலங்கள் தனைமறக்க வேண்டுமாமே.

சுவாமியிடம் தமிழிரந்தார் ஷரிபுத்தீன்தன்
தமிழறிவை கவிநிலா வணனுக்கீந்தார்
தவமாகக் கொண்டார்கள் இருபேரும்தம்
தாய்மொழியை வளர்க்கப்பெருந் தொண்டு செய்தார்
உவந்தார்கள் தலைமுறைகள் மாற்றிமாற்றி
ஒப்புவிக்கத் தாய்மொழியை காத்துப் போற்ற
இவையோடு உறவுக்கும் பாலமானார்
'இருதயத்தின் ஈரிதழ்கள்' போலுமானார்.

சுவாமிதந்த தமிழெந்தை ஷரிபுத்தீனைத்
தமிழ்ப்புலவ னாக்கியது நானும் மாந்தி
நவமான இலக்கியங்கள் மரபு காத்து
நெய்கின்றேன் தமிழணங்கிற் கழகு சேர்க்க
கவர்விரிந்து வான்பரப்பி வேருமோடிக்
காத்ததெங்கள் உறவுமறை கிழக்கில் யார்செய்
பவத்தாலோ அழிந்ததின்று வடக்கும்கூடி
புதுவாழ்வு முனைப்பெடுக்கத் தொண்டு செய்வோம் .

[illegible]

# சொல்வளம் பெருக்குவோம் (4)

— பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம் —

## கலைச்சொற்கள் :

கலைச்சொற்கள் கருத்துச் செறிவுடன் காலத்துக் காலம் சுருக்க மாக மாறுபட்டு வருகின்றன. Logos என்பது கிரேக்க சொல். இது திரிந்து **Logy** என வழங்கப்பட்டது. இதன் பொருள் **'சிறப்பு மிக்க அறிவுத்துறை'** என்பதாகும். இந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்து **Logy** என முடியும். ஐரோப்பிய மொழிச் சொற்களை **'இயல்'** என்னும் விகுதியோடு இணைத்து வழங்குகிறார்கள்.

| | | |
|---|---|---|
| Biology | – | உயிரியல் (உயிரினவியல்) |
| Ecology | – | சூழ்நிலை இயல் |
| Homology | – | அமைப்பொப்பியியல் |
| Parsitology | – | ஒட்டுண்ணியல் |
| Physiology | – | உடலியல் (உடற்றொழிலியல்) |
| Phychology | – | உளவியல் |
| Zology | – | விலங்கியல் |
| Anthropology | – | மனிதவியல் (மானுடவியல்) |
| Topology | – | வகையியல் |
| Theology | – | இறையியல் (கடவுட் கொள்கையியல்) |
| Sociology | – | சமூகவியல் |

இவைபோன்று **ism** என முடியும் ஐரோப்பிய மொழிச் சொற்க ளைத் தமிழாக்கம் செய்கின்ற போது **'அம்'** அல்லது **'இயம்'** என்ற விகுதியை இணைத்து சொற்களாக்கப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| (உ+ம்) | Buddhism | – | பௌத்தம் |
| | Saivism | – | சைவம் |
| | Vaishnavam | – | வைணவம் |
| | Imperialisim | – | ஏகாதிபத்தியம் |
| | Capitalism | – | முதலாளித்துவம் |

சொல்லாக்கத்திற்கு இம்முறைகளையும் கையாண்டு சொல்வளம் பெருக்குவோமாக.





**எழுத்தாளர்களே! / கலைஞர்களே! / ஊடகவியலாளர்களே! / இலக்கிய ஆர்வலர்களே!**
**நீங்கள் படித்ததை — பார்த்ததை — கேட்டதை — அறிந்ததை இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள்.**

## தென்னிந்திய சினிமாவில் பற்றியெரிந்த நெருப்பு

# 'நான் கடவுள்'

*உலக சினிமாக்களில் இதுவரை உதயமாகாத வெளிவராத ஒரு நெருப்பாக ஆங்கிலத் திரைப்படங்களாகட்டும், ஹிந்தித் திரைப் படங்களாகட்டும் அல்லது ஏனைய வேற்றுமொழித் திரைப்படங்களா கட்டும், இப்படி எந்தவொரு மொழியைச் சார்ந்த திரைப்படங்களிலிருந்தும் விலகி, வித்தியாசமான நெருப்பு இலங்கைத் திரையரங்குகளுக்கும் பரவி வந்தது. தரமான தமிழ் தென்னிந்திய தமிழ் சினிமாவான "நான் கடவுள்" ஆகாயத்தினின்று தரைக்கு இறங்கியது.*

*தென்னிந்திய திரையரங்குகளில் அலைமோதிய கூட்டம் போலவே இங்கு இலங்கையிலும், ஜாதி பேதமின்றி அத்தனை சனங்களும் இப்படத்தை கண்டுகளித்தனர். இவர்கள் மத்தியில், நானும் ஓர் இடத்தில் அமர்ந்து கைதட்டல் ஓசை, விசில் சத்தம், மகிழ்ச்சி ஆரவாரத்தினூடாக இந்தக் கடவுளைக் கண்டேன்.*

*தென்னிந்திய சினிமாவில் எதிர்நீச்சல் போட்டு, சினிமா என்ற கருப்பொருளையே தலைகீழாக சாய்த்து, எவருமே எக்கோணத்திலும் இருந்து சிந்தித்திராத புதுமையான மனித உணர்வுகளை உணர்ந்து கடவுளையே படைத்த படைப்பாளியாக "நான் கடவுள்" இயக்குனர் "பாலா" விளங்குகிறார்.*

*இவருடைய படைப்பான "நான் கடவுள்" படத்தினை ரசிகர்கள் பார்க்கும் போது அவர்களின் மனதையும், அதன் சிந்தனைகளையும் ஒரு தியானத்தில் இருப்பது போல இப்படமானது கவர்ந்திழுக்கின்றது. அவருடைய அதி உன்னதமான ஞானம், புத்தி கூர்மையானது எந்தவொரு ரசிகனையும் கட்டுப்படுத்தி ஒரு இடத்தில் அமரச்செய்து ரசிக்கும்படியான ஒரு மேலான படைப்பாக, ஒரு யானையைக் கட்டுப்படுத்தி வழிநடத்தும் பாகனைப்போல ரசிகர்களைக் கட்டுப்பாடாக ஒருமுகப்படுத்துவது இவருக்கு கைவந்த கலையாக இருக்கின்றது.*

இவர் வடித்த இந்த கதையான "நான் கடவுள்" உலகின் முடிவு வரை முடிவுறாத நமது கதையாக இருக்கின்றது. எப்படியெனில் துக்கம் இருக்கும் வரை உலகும் இருந்து கொண்டிருக்கும், உலகம் இருக்கும் வரை துக்கமும் இருந்து கொண்டுதான் இருக்கும்.

ஒரு இயற்கையான கலாரசனைமிக்க ஒரு படத்தினைப் பார்க்க வேண்டும், ரசிக்கவேண்டும் என்றொரு கலைப்பசி எனக்கிருந்தது. அது நீண்ட காலங்களுக்குப் பின் இந்த சினிமாப்படம் மூலம் அந்தப் பசி என்னும் நெருப்பு அணைந்தது என்றால் மிகையாகாது.

பாலாவின் இயக்கம் என்பது மட்டுமில்லாமல் "CAMERA DIRECTOR ஆத்தர் A.வில்சன்" உடைய கை வண்ணத்திற்காக அவருக்கு விஷேடமான கௌரவத்துடன் விருதும் கிடைக்கப்பெற வேண்டும். கண் இமைக்காமல் இத் திரைப்படத்தை ரசிகர்களைப் பார்க்க வைத்ததில் இவருடைய திறமை பாராட்டத்தக்கது.

"நான் கடவுள்" இசையமைப்பாளரான "இளையராஜா" அவரது தனித்துவமான ஆத்மார்த்தமான இசையின் மூலம் எம்மை சொர்க்க வாசலுக்கே அந்தக் கடவுளின் அருகே போய் வந்தது போன்ற ஒரு திருப்தியினை, மன அமைதியினை ஏற்படுத்துகின்றதான ஒரு உணர் வினை எமக்குள் உண்டாக்கி விடுகின்றார். சங்கீதத்தின் ராஜா "இளையராஜா" ஆஸ்கார் ஒன்றல்ல இரண்டைப்பெற்ற நாயகனின் குருவான அவரின் பெருமையை இந்த எழுத்துக்களால் எழுதி முடித்திட முடியாது.

மற்றது, "நான் கடவுள்" என்ற அந்தக் கதையில் ஆஜானுபாகு வாக அந்தப் பாத்திரத்திற்கு உயிர்கொடுத்த "ஆர்யா" வைப் பற்றி சொல்வதென்றால், கடவுள் இருப்பது அண்டசராசரத்தில் என்றால் அந்த உயரத்திற்கு அவரின் திறமையும் உயர்ந்தது என்றால் மிகை யாகாது. இவ்வளவு காலம் அவரின் இந்த அபரிதவிதமான திறமை எங்கு ஒளிந்திருந்தது? அவருடைய சக்தியை இந்தளவு பயன்படுத்தி தனக்கென தனியிடத்தைப் பிடித்த ஆர்யா தமிழ் சினிமா உலகத்தில் மட்டுமல்ல ஹொலிவூட் சினிமாவிலும் கால்பதிக்க தகுதிகள் நிறைந்த வர் என அடித்துக் கூறலாம். தமிழ் சினிமாவில் புகழ்பெற்ற நட்சத்திரம் சூப்பர் ஸ்டார் ரஜனிகாந், விஜய், விக்ரம் என்று எல்லோரும் இவரைப் பற்றி புகழ்கிறார்கள் என்றால் அது அவரின் நடிப்பாற்றல்தான்.



இப்படமானது நம் இலங்கைக்கும் பெருமை ஏனெனில் இந்திய இலங்கை மகளான "பூஜா கௌதமி உமாசங்கர்" எந்தவொரு நடிகையும் நடிக்க இஷ்டப்படாத ஒரு மிகவும் கஷ்டமானதொரு பாத்திரத்தை ஏற்று நடித்தார். அழகான அவருடைய உருவத்தை அசிங்கமாக உருமாற்றி கண்தெரியாத தோற்றத்தினை ஏற்படுத்தி, தன்னை வருத்தி அவராலும் நடிக்க முடியும் என்று முத்திரை பதித்துள்ளார். இப்படத்தில் நாம் பார்த்தது பூஜாவை அல்ல ஒரு குருடான பிச்சைக்காரியை அந்தப்பாத்திரமாகவே ஒன்றரை ஆண்டு காலம் வாழ்ந்தார். இதனால் சிங்களத் திரைப்படங்களில் நடிக்க நேரம் போதாத காரணத்தினால் மூன்று சிங்களத் திரைப்பட வாய்ப்பி னையும் இழந்தார்.

இறுதியில் அவருக்கு சூப்பர்ஸ்டார் ரஜனிகாந் பூங்கொத்து கொடுத்து அவரின் நடிப்பை வெகுவாக பாராட்டியிருக்கிறார் என்பது பெருமையுடன் குறிப்பிடத்தக்க விடயம்.

பாலா, பூஜா, ஆர்யா உலக சினிமாக்களில் சர்வதேச சினிமாக் களில் கால் பதித்து சாதிக்கக்கூடிய மும்மூர்த்திகள். இந்த ருத்ரனைப் போன்ற இளைஞர்களுக்கு கடவுளின் அனுக்கிரகமும் இல்லை, மனித னின் அரவணைப்பும் இல்லை. இப்படியானவர்கள் நினைப்பது அவர்க ளின் சக்தி அவர்களுடைய தைரியம் இதுவெல்லாம் ஒன்று சேர்ந்து "நான் கடவுள்" என்ற பிரமையை அவர்களுக்குள் தோற்றுவிக்கின்றது எனலாம்.

"பாலா" என்ற படைப்பாளனின் படைப்பை என் கண்ணால் நான் ரசித்த என்னுடைய கோணம் இது.

நான் சகோதரமொழி ரசிகை
**ஏஸ்கா விஜேசூரிய**

மொழிபெயர்ப்பு
**திருமதி. P.ரவீந்திரன்**

## அன்பான வேண்டுகோள்!

**சந்தாதாரர்கள் தங்கள் 2009ம் ஆண்டுக்குரிய சந்தாவைச் செலுத்திப் புதுப்பிப்பதுடன் தங்களுக்குத் தெரிந்த இலக்கிய ஆர்வலர்களில் குறைந்தபட்சம் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவுங்கள். அது 'செங்கதிர்' இன் வரவுக்கும், வளர்ச்சிக்கும் உரமாக அமையும். 2009ம் ஆண்டுக்குரிய ஆண்டுச்சந்தா ரூ.750/- மட்டுமே.**



**மலையகத்தின் மூத்த படைப்பாளியும் அண்மையில் (11.04.2009) அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அவுஸ்தி ரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஒன்பதாவது எழுத்தாளர் விழாவில் கலந்துகொண்டு தனது பவள விழா வையொட்டிய பாராட்டு விருதும் பெற்றுத் திரும்பியுள்ள தெளிவத்தை ஜோசப் அவர்களின் 'மலையகத்தில் சிறுகதை வரலாறும் வளர்ச் சியும்' எனும் தொடர் கட்டுரை.**

# மலையகத்தில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்

**தெளிவத்தை ஜோசப்**

**(சென்றமாதத் தொடர்ச்சி....) - (3)**

ஈழம் என்ற சொல்லுக்குப் பதிலாக மலையகம் என்று போட்டுக்கொண் டோமேயாகில் மிஞ்சுவது சி.வி. மட்டுமே.

அதுதான் இக்கட்டுரையில் சி.வி.க்குக் கிடைத்திருக்கும் முக்கியத்துவம். அறுபதுக்குப் பின்னெழுந்த இலக்கியப் புத்தெழுச்சி அந்தப் பழைய தளத்தின்மேல்தான் எழுந்தது என்று கொள்ள வேண்டியதுமில்லை என்று நான் முன்பு கூறியதற்கான காரணமும் அதேதான்.

60களுக்குப் பின் எழுந்த இலக்கிய வேகத்துக்கு இவர்கள் யாரும் வழிகாட்டிகளாக இருக்கவில்லை. இவர்களுடைய எழுத்துக்கள் எதுவும் புதியவர்கள் மேல் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

தாங்களே பாதையும் வெட்டி பயணமும் போகவேண்டியதொரு நிலை தான் இவர்களுக்கிருந்தது என்று மு.நித்தியானந்தன் கூறியிருப்பதும் இதையே தான் – ('நாமிருக்கும் நாடே முன்னுரை')

மலையகம் என்னும் கோஷத்தை முன்வைத்து இந்த மக்களுக்கு ஒரு அடையாளத்தைத் தேடித்தர, படித்த மலையக இளைஞர்கள் ஒன்றிணைந்து 1960இல் மலைநாட்டு **'நல்வாழ்வு வாலிபர் சங்கம்'** என்ற அமைப்பை உருவாக் கினார்கள். அதன்பின் தோன்றிய மலையக இளைஞர் முன்னணி, மலையக மக்கள்



இயக்கம், மலையக வெகுஜன இயக்கம் போன்றவைகளின் செயற்பாடுகள் ஒரு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தின. இலக்கிய எழுச்சிக்கு சமூக விழிப்புணர்வு தேவை என்னும் உண்மைக்கு ஒப்ப மலையகச் சமுதாய விழிப்புணர்வு மலையகச் சிறுகதை எழுச்சிக்கும் காலாய் அமைந்தது. இந்த எழுச்சிக்கு வித்திட்டவர்களாக என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தை ஜோசப் ஆகிய இருவரையும் கூறலாம்.

எவ்வித வழிகாட்டலுமின்றி அறுபதுகளில் மலையகச் சிறுகதை இலக் கியத்துள் பிரவேசித்த இவர்கள் தங்களுடைய எழுத்தின் வளத்தால் கடல் கடந்த நாடுகளிலும் மலையகச் சிறுகதைக்கு ஒரு மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர். ராமையாவின் **'வேட்கை'** என்னும் கதையை மறுபிரசுரம் செய்திருந்த மஞ்சரி "இலங்கையில் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் மண் மணம் வீசும் சிறுகதைகளைப் படைத்துவருகின்றனர். அவற்றில் தமிழ்ப்பண்பாடு பளிச்சென்று பிரதிபலிக்கின்றது. நாம் அவற்றைப் பற்றி பெரிதும் அறியாதிருப்பது எவ்வளவு பெரிய நஷ்டம்" என்று எழுதியது (மஞ்சரி மார்ச் 69). கலைமகள் (கி.வா.ஜ) தெளிவத்தை ஜோசப்பின் கதைகளைக் கடிதம் எழுதிக் கேட்டுப் பிரசுரித்தது. இவர்களுக்குப் பிந்தி எழுத வந்தவர்களுக்கு இவர்கள் இருவரும் வழிகாட்டிகளாக இருந்திருக்கின்றனர். இவர்களுடைய எழுத்தின் தாக்கம் பிந்தி எழுத வந்தவர்களைக் கணிசமான அளவுக்குப் பாதித்தே இருக்கிறது.

"முழங்காலைப் பிடித்துக்கொண்டு படிகளில் ஏறிவந்த ரெங்கையாக்கிழவன் கடைசிப் படியில் நின்று வாயால் ஊதிக்கொண்டான். பத்துப் பதினைந்து படிகள் ஏறியதில் அவனுடைய கிழட்டுக்கால்கள் வெடவெடவென்று நடுங்கின". – ராமையாவின் வேட்கையின் ஆரம்பம் இது. அவசர அவசரமாக, வாசித்துவிட்டு ஓடாமல், படிப்படியாக முழங்காலைப் பிடித்துக்கொண்டு பதினைந்து படியேறிய கிழவன் கடைசிப்படியில் நின்று அப்பாடா ஏறிமுடித்து விட்டோம் என்ற திருப்தியில் வாயால் ஊதிக்கொள்வதை ஆற அமர இருந்து இரசிக்க வேண்டும். இது என்ன படிகள். தோட்டத்தில், லயத்திலிருந்து ஆபீசுக்கோ, ஓரிடத்திலிருந்து இன்னொரு லயத்துக்கோ போகவேண்டுமானால் மலைகளில் கட்டப்பட்டிருக்கும், அல்லது வெட்டப்பட்டிருக்கும் படிகளில் ஏற வேண்டும். அது பத்தாகவும் இருக்கலாம், பதினைந்தாகவும் இருக்கலாம், நூறாகவும் இருக்கலாம், நூற்றைம்ப தாகவும் இருக்கலாம்.

மார்பில் ஜடை சிலிர்க்க மாடிப்படி ஏறிவரும் மாலாக்களையே வாசித்து வாசித்து பழக்கப்பட்டுவிட்ட – மரத்துவிட்ட மனங்களுக்கு ரெங்கையாக்கிழவனின் படியேற்றத்தை ரசிக்கவா முடியும்.

ஆனால் பிந்தி வந்த மலையக எழுத்தாளர்கள் இதை ரசித்திருக்கின்றனர். ரெங்கையாக்கிழவன் அவர்கள் மனதில் பதிந்திருக்கின்றான். வேட்கைக்குப் பின்னெழுந்த இரண்டொரு கதைகளில் இடம்பெறும் கிழவர்கள் ரெங்கையா என்றே பெயர் சூடிவந்தனர். (**'கறிவேப்பிலைகள்'** - வீரகேசரி 78) கிழவர்கள் என்றால் ராமையாவின் ரெங்கையாதான் என்னும் அளவுக்கு மனதில் பதிந்திருக்கிறது **'வேட்கை'**யின் அந்தப் பாத்திரம்.

மலையகத்தின் இளைய பரம்பரையின் முக்கிய எழுத்தாளரான மாத்தளை வடிவேலனுக்கு ராமையாவையும் ராமையாவின் படைப்பையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியவில்லை. தன்னுடைய **'வெட்டு மரங்கள்'** என்னும் கதையின் முக்கிய பாத்திரமான வயோதிபக் கிழவனை ராமையாக கிழவன் என்றே பெயர்சூடி அழைக்கின்றார். (**'வெட்டு மரங்கள்'** – சமர் – 80)

தெளிவத்தை ஜோசப்பின் **'பழம் விழுந்தது'** என்னும் கதை வீரன் விக்கித்து நின்றான் என்று ஆரம்பிக்கின்றது. கதை எல்லாம் நடந்து முடிந்தபின் வீரன் விக்கித்து நின்றான் என்றே முடிகின்றது. அதேபோல் **'கூனல்'** என்னும் கதை, அந்த நாலுமாடிக் கட்டிடம் நகைத்துக்கொண்டது என்று ஆரம்பித்து, குடித்துப் பார்க்க ஒருபிடி தேயிலை எடுத்துவிட்டான் என்பதற்காக திருட்டுப்பட்டம் கட்டி தோட்டத்தை விட்டு விரட்டப்பட்ட தொழிலாளியையும் அவனுக்கு திருட்டுப்பட்டம் கட்டிய டீமேக்கரய்யா அன்று இரவு காரைக் கொண்டுவந்து நிறுத்தி காவற்காரனின் உதவியுடன் பெட்டி பெட்டியாகத் தேயிலை களவாடுவதையும் காட்டிவிட்டு, அந்த நாலுமாடிக் கட்டிடம் நகைத்துக் கொண்டது என்று முடிகிறது.

இப்படி ஆரம்ப வாக்கியத்திலேயே முடியும் வேறு ஏதாவது கதைகள் தமிழில் வந்திருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த தோட்டத்து மக்கள் எத்தனையோ பாடுகள் சிரமங்கள், கோஷங்கள் ஆகிய இன்ன பிற முயற்சிகளுக்குப் பிறகும் அந்த ஆரம்ப நிலையிலேயே இருந்துவிடுவதற்கான ஒரு குறியீடாக இதை நான் கொள்ளுகின்றேன். விக்கித்துப்போய் நிற்கும் நிலை....! அக்கிரமம் தான் அநியாயம்தான் என்று தெரிந்தாலும் அந்த நாலு மாடிக்கட்டிடத்தைப் போல் – ஒரு ஜடப்பொருளாய் நகைத்து மழுப்பிக் கொள்வதைத் தவிர என்ன செய்துவிட முடிகிறது! என்ன செய்துவிட முடிந்தது!

நூறு நூற்றைம்பது வருடம் என்று வாழ்ந்து இரண்டு மூன்று பரம்பரை கண்டுவிட்ட பின்பும் வந்தது போலவே வெறும் கையும் தானுமாகக் கப்பல் ஏறவில்லையா, ஆரம்பித்தது போலவே!



**'பிரசவக்காசு'** என்னும் பரிபூரணனின் கதையும் இதேபோல், சன்னாசி சிலையாக நின்றான் என்று ஆரம்பித்து சன்னாசி சிலையாக நின்றான் என்றே முடிகிறது. இதுவும் சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற கதை. தெளிவத்தை ஜோசப் தான் அந்தப் பெயரில் கதை எழுதி பரிசுவாங்கியதாக ஒரு கதை அடிபட்டது. பரிபூரணன் பிறகும் தன்னுடைய சிறுகதைகளுக்குப் பரிசுபெற்றவர். **'ஒரு நாய் தன்வாலைப் பிடிக்கிறது'** என்னும் மல்லிகைக் கதைக்குத் தகவம் பரிசினையும் பெற்றார். ஒரு அருமையான மரபுக்கவிஞர். பரிபூரணனுடனான ஒரு பேட்டியில் உங்களுடைய கதைகள் தெளிவத்தையின் கதைகள் போல் இருக்கின்றனவே என்னும் காவலூர் ஜெகநாதனின் கேள்விக்கு அவர் அளித்த பதில் நான் யாரை கூடுதலாக வாசிக்கின்றேனோ அவருடைய எழுத்தின் தாக்கம் என்னுடையதில் பிரதிபலிக்கும்தானே. நான் அவருடைய கதைகளைத்தான் கூடுதலாக வாசிக்கின்றேன். என்பதாகும். பரிபூரணன் தெளிவத்தையின் கடைசித் தம்பி என்பது வேறு கதை.

என்னுடைய படைப்புக்களில் நான் கூடுதலாக வாசிக்கும் தெளிவத்தையின் நடை தவிர்க்க முடியாமல் இருந்துவிடலாம். என்று நூரளை சண்முகநாதன் பூரணியில் குறிப்பிடுகின்றார். தன்னுடைய **'கவ்வாத்து'** என்னும் சிறுகதைக்கான விளக்கக் குறிப்பில், நான் கதை எழுதத் தொடங்குமுன் என்.எஸ்.எம் அல்லது தெளிவத்தையின் ஏதாவதொரு கதையை வாசிப்பேன் என்று மனம் திறந்து கூறியுள்ளார். பல பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றுள்ள மாத்தளை வடிவேலன். பிரசுரத்துக்காக அனுப்புவதற்குமுன் என்னுடைய கதைகளை என்.எஸ்.எம்மிடம் காட்டி ஆலோசனைகள் பெறும் வழக்கம் உள்ளவன் நான் என்று கூறுகின்றவர் சாகித்திய விருதுபெற்ற மலரன்பன்.


மலையகத்திலிருந்து எழுந்த படைப்புக்கள் கொழும்பையும் மற்றப் பிரதேசங்களையுமே பிரசுரத்துக்காக நம்பி இருக்கவேண்டிய நாட்கள் அவை. இப்போதும் ஏறத்தாழ அப்படித்தான்; என்றாலும் இந்த ஆரம்பப் படைப்பாளிகள் பட்ட அனுபவங்கள் தனியானவை.

"இது தான் மலைநாடு, இதுதான் அவர்களது வசிப்பிடம். இதுதான் அவர்களுடைய மொழி... வாழ்நிலை" என்று ஒவ்வொன்றையும் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி.... புரியவைத்து.... பழக்கப்படுத்தி.... ராமையாவின் ஒரு கதையில் வரும் சம்பாஷனை இது. "ஏலே நில்லு. எந்த நொப்பன் என்னமோ புகாரு பண்ணுறான்......" சம்பளம் எடுத்தால் வீட்டுக்குக் கொடுப்பதில்லை என்று பேரனைக் கண்டிக்கும் தாத்தாவின் ஆரம்பம் இது. பீடி மனமும் தானுமாக நின்ற பேரனையும் அவன் தாத்தாவுக்குப் பதிலளித்த விதமும் கிழவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் போகும் திசையைப் பார்த்துப் பொருமுகின்றான். "என்னா அடக்க ஒடுக்கம்! முருகம், முருகம்!" என்று.

■ (அடுத்த இதழில் தொடரும்....)

# வேரும் விழுதும்

**இலங்கையின் ஆற்றல் மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை தமிழ்கூறு நல்லுலகின் இளைய தலைமுறை இனம்கண்டுகொள்ளாமல் அல்லது அறியாமல் இருக்கிறது. ஈழத்து இலக்கிய விருட்சத்தின் வேர்களாகவும் விழுதுகளாகவும் விளங்கும் இத்தகையோரை இளைய சமுதாயத்திற்கு வெளிப்படுத்தும் நோக்கில் 'வேரும் விழுதும்' எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



## கலாபூஷணம் 'சிவநெறிச் செம்மல்'
## வை.அநவரத விநாயகமூர்த்தி

'சிவநெறிச் செம்மல்' வை.அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக சமயம், வரலாறு, ஆராய்ச்சி, சிறுகதை, விமர்சனம், இலக்கியம் என பல துறைகளிலும் எழுதி வருபவர். தமிழகத்தில் 'கல்கி' கிருஸ்ண மூர்த்தியினால் ஆரம்பிக்கப்பட்ட சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ஆரம்பகால உறுப்பினராயும் இருந்துள்ளார்.

31.08.1923 இல் யாழ்ப்பாணத்தில் இணுவில் கிராமத்தில் வைத்திய லிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை இணுவில் ஸ்ரீ அம்பிகைபாகர் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் (தற்போது இணுவில் இந்துக்கல்லூரி) கற்றார். பின் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் உயர்கல்வி யைப் பெற்றார். யாழ் இந்துக்கல்லூரியில் பயிலும்போது London Marticulation Exam பாடத்திட்டத்திற்கேற்ப நடாத்தப்பட்ட விஷேட பரீட்சையில் தமிழ்மொழி, ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் அதி விசேட சித்திபெற்றார். அத்துடன் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் வித்துவான் முதலாவது தேர்வுப் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

யாழ் இந்துக்கல்லூரியில் 1939இல் உயர்தரவகுப்பு மாணவனாக இருந்தவேளை கல்லூரிச் சஞ்சிகையான 'இந்து இளைஞன்' இல் 'அந்தி மாலைக்காட்சி' எனும் கட்டுரையை எழுதியதன் மூலம் எழுத்து லகில் காலடி எடுத்து வைத்த இவர் இதுவரை பத்து நூல்களை வெளி யிட்டு தற்போது எண்பத்தைந்து வயதைக் கடந்த நிலையிலும் பதினோ



ராவது நூலான **'ஆனந்த நடனம்'** எனும் நூலை எழுதிக் கொண்டிருக் கிறார். **'தமிழர் வாழ்வில் இலக்கியங்கள் சுட்டும் விழுமியங்கள்'** எனும் நூலும் வெளிவரவுள்ளது. முதுமையிலும் சுறுசுறுப்பானவர்.

1944 இல் அரசாங்க சேவையில் எழுதுவினைஞராகச் சேர்ந்து படிப்படியாக பதவி உயர்வுபெற்று இறுதியாகக் கல்வி அமைச்சில் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றி 1983இல் ஓய்வு பெற்றார்.

1954 ஏப்ரல் - 1956 ஏப்ரல் காலப்பகுதியில் **'உதயம்'** என்ற மாத சஞ்சிகையையும் கௌரவ ஆசிரியராக இருந்து வெளியிட்டார். மேலும் இந்து சாதனம், ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், சுதந்திரன், சமூகத் தொண்டன், கலைச்செல்வி ஆகிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது கட்டுரைகள், கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை வானொலியிலும் இவரது கட்டுரைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஒன்பதாம் வகுப்புப் பாடப்புத்தகமான **'திரிவேணித் தமிழ்ச் செல்வம்'** எனும் நூலில் இவரது **'நயம்படவுரை'** எனும் கட்டுரை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். தனது சொந்தப் பெயரிலும் **'இணுவை மூர்த்தி'** எனும் புனைபெயரிலும் ஆக்கங்களைப் படைத்துள்ளார்.

1948 - 1951 காலப்பகுதியில் வத்தளை - உணுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் உதவிச் செயலாளராகவும், கல்வியமைச்சின் இந்து மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்/ பொருளாளர்/செயலாளர்/துணைத் தலைவர்/ தலைவராகவும் சமய, சமூகப்பணிகளை ஆற்றியுள்ள இவர் தற்போது சர்வதேச சமய சுதந்திரத்திற்கான நிறுவனத்தின் (International Association for Religious Freedom) கொழும்புப் பிரிவின் துணைத் தலைவராகவும் உள்ளார்.

1956 இல் திருநெல்வேலியைச் சேர்ந்த அருளம்பலம் சிவயோகம் எனும் ஆசிரியை வாழ்க்கைத்துணைவியானார். இரு புதல்வர்களும் ஒரு புதல்வியும் உள்ளனர்.

**<u>இதுவரை வெளியிட்ட பத்து நூல்கள்</u>**

1. நவராத்திரியும் கலைமகள் வழிபாடும் (1975) (கல்வி அமைச்சின் இந்து மன்றத்தின் சார்பில் வெளியிடப்பட்டது)
2. கல்விச் செல்வி (1976) (கல்வி அமைச்சின் இந்து மன்றம் வெளியிட்ட சிறப்பு மலர்)

3. நக்கீரர் நன்முருகாற்றுப்படை (1978) நூல்நிலையத்திற்குரிய புத்தக மாக கல்வி நூற்பிரசுர ஆலோசனைச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது)

4. யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு (1994)

5. தேவியர் மூவர் தோத்திரப் பாடல்கள் (1997)

6. சிவயோக சுவாமிகளும் அவர் அருளிய போதனைகளும் (1998)

7. திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வரலாறு (இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தின் பரிசு பெற்றது)

8. சிவ நெறிச் சிந்தனைகள் (2000)

9. யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு = பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் (2003)

10. இலங்கை இலக்கியத்தில் இனிய முத்துக்கள் (2004) - சென்னை மணிமேகலைப் பிரசுரம்)

- இவரது சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி 12.02.1995ல் நல்லை திருஞானசம்மந்தர் ஆதீன இரண்டாவது குரு மஹா சந்தானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்மந்த பரமாச்சார்ய சுவாமி அவர்களால் **'சிவநெறிச் செம்மல்'** எனும் விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டார்.

- 22.01.2005 அன்று கொழும்பு ஜோண் டி சில்வா அரங்கில் நடைபெற்ற விழாவில் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் அவர்களால் கலாசார அலுவல்கள் அமைச்சு வழங்கிய **'கலாபூஷணம்'** விருது அளிக்கப்பட்டார்.

- இந்தியா டெல்லியில் அமைந்துள்ள **'ASIA INTERNATIONAL'** என்ற நிறுவனம் 1984ம் ஆண்டில் தொகுத்து வெளியிட்ட **'LEARNED INDIA'** எனும் நூலில் அநவரதவிநாயகமூர்த்தி (இணுவை மூர்த்தி) அவர்களின் சமய, சமூக, இலக்கியப் பணிகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

19ம் நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களில் ஒருவரான தணிகைப் புராண உரையாசிரியர் மஹாவித்துவான் பொன்.அம்பிகை பாகர் அவர்களின் புதல்வரே பெரியார் வை. அநவரத விநாயகமூர்த்தி யின் தந்தை இயற்றமிழ் ஆசிரியர் அ.க.வைத்தியலிங்கம் அவர்கள். ஆதலால் அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள் மரபுத் தமிழில் துறைபோனவர். ஆழ்ந்த தமிழறிவு, மரபிலக்கியப் பயிற்சி, சமயப் புலமை, வரலாற்று ஞானம் அனைத்தும் வாய்க்கப்பெற்ற மூத்த தலைமுறை எழுத்தாளர்.


தமிழ்நாடு மணிமேகலைப் பிரசுர நிர்வாகி திரு.ரவி தமிழ்வாணன் அவர்கள் **'இணுவை மூர்த்தியின் இலக்கியச் சமயப் பணிகள்'** எனும் தலைப்பில் இவரைப்பற்றிய நூலொன்றினை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அகவை எண்பத்தாறை நெருங்கிவிட்ட இப்பெரியார் இன்னும் பல்லாண்டு ஆரோக்கியமாக வாழ்ந்து எழுத்துப்பணி செய்ய 'செங்கதிர்' வாழ்த்தி மகிழ்கிறது.

**–செங்கதிரோன்–**



தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் **'பாலம்'** மாத இதழ் சர்வதேசரீதியாக நடாத்திய வல்லிக் கண்ணன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டியில் ஈழத்து எழுத்தாளர் நீ.பி.அருளானந்தம் அவர்கள் எழுதிய **'இரத்தம் கிளர்த்தும் முள்முடி'** எனும் சிறுகதை முதல் பரிசு பெற்றிருந்தது. அதற்கான பரிசை அண்மையில் (06.06.2009) தமிழகம் சென்றிருந்த நீ.பி. அருளானந்தம் அவர்கள் இந்தியாவின் ஞானபீட விருதுபெற்ற எழுத்தாளர் **'பாலம்'** சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியருமான திரு.ஜெயகாந்தன் அவர்களிடமிருந்து பெற்றார்.



# செங்கமலம் — 6

எம்.பி.செல்லவேல்

புகையிரதமும் திடீரெனப் பிரயோகிக்கப்பட்ட தடுப்பு அழுத்தியால் தனது வேகத்தை மட்டுப்படுத்த, குலுங்கியபடி புகையிரதமும் ஓய்வுக்கு வருகிறது. பழைய நினைவுகளில் சஞ்சரித்த வண்ணம் இருந்த ரகுவின் எண்ணக்கோர்வையானது அறுபட அவனும் சுயநினைவுக்கு வருகிறான். சுற்றுமுற்றும் அவன் கண்கள் துழாவுகின்றன. அருகிலிருந்த நண்பனை உற்றுநோக்குகின்றான். கணேசனும் எதுவும் அறியாதவன் போல ஆழ்ந்த உறக்கத்தில் கிடப்பதைக் காண்கின்றான்.

வெளிப்புறமாக பார்வையை ஒருசில விநாடிகள் வீசுகிறான் ரகு. அது ஒரு புகையிரத நிலையமாக இருப்பதைத் தெரிந்துகொண்டான். கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்த போது நேரம் இரண்டு முப்பதைக் காட்டியது. புகையிரத நிலையத்தில் அவ்வளவு மக்கள் கூட்டம் காணப்படவில்லை. எவரும் இறங்கியதாகத் தெரியவில்லை. ஒரு சிலர் மட்டுமே ஏறிக்கொள்ள உடனடியாகப் புகையிரதமும் நகர ஆரம்பித்தது.

நித்திரையின்மையால் தனது கண்கள் எரிச்சல் எடுப்பதை ரகு உணர்ந்துகொண்டான். அவன் தான் நித்திரையில் இருக்கவில்லையே! பழைய நினைவுகளிலல்லவா மூழ்கியிருந்தான். மீண்டும் கண்களை ரகு மூடிக்கொண்டான். புகையிரதமும் ஆர்முடுக ஆரம்பித்தது. அவனது நினைவுகளும் மீண்டும் ஆரம்பமாகி அவனை இழுத்துச் செல்லலாயிற்று.

• • •



பாடசாலையை விட்டு வீட்டுக்கு வந்த ரகுவின் எண்ணங்கள் யாவும் செங்கமலத்தின் நடவடிக்கைகளைச் சூழவே ஆய்வு செய்துகொண்டிருந்தது. தனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டாளா? அல்லது நிராகரித்து விட்டாளா? என்ற வினா அடிக்கடி வந்து அவனைத் தொந்தரவு செய்துகொண்டிருந்தது. எதுவும் புரியவில்லை அவனுக்கு. இருப்பினும் அவள் வகுப்பறையை விட்டு வெளியேறிய போது தன்னைத் திரும்பிப் பார்த்தாளே! அது ஏன்? அதற்கான காரணம் யாது? தனக்கு பச்சைக் கொடி காட்டவா அப்படித் திரும்பிப் பார்த்தாள் என்ற ஓர் எண்ணமும் இடைக்கிடை தோன்றி அவன் உள்ளத்துக்கு நெருடல் கொடுத்துக் கொண்டிருந்தது.

இப்படியாக பல வினாக்களும், ஏக்கத்தவிப்புகளுமாக அன்றைய இரவு அவனுக்குக் கழிந்து போனது. மறுநாள் மிகவும் வெள்ளெனவே பாடசாலைக்குப் பறப்பட்டுவிட்டான் ரகு. செங்கமலத்தைக் காணலாம், பேசலாம் என்ற நம்பிக்கையுடன் அவன் புறப்பட்டுப்போனான். பாடசாலைக்குள் அவன் நுழைந்த போது ஓரிரு மாணவர்களைத் தவிர வேறெவரும் சமூகமளித்திருக்கவில்லை. பாடசாலையும் ஆரவாரமின்றி அமைதியாகக் கிடந்தது. தனது வகுப்பறையை நோக்கி அவன் கால்கள் விரைந்தன. வகுப்பறையினுள் அவன் நுழைந்த போது அவன் கண்டகாட்சி அவனுக்கு அதிர்ச்சியையும், ஆனந்தத்தையும் கொடுப்பதாக இருந்தது.

அவனால் நம்பவே முடியவில்லை. வழமைக்கு மாறாகச் செங்கமலம் வகுப்பறையுள் ஏற்கனவே அமர்ந்திருந்தாள். பொதுவாக பாடசாலை ஆரம்பிப்பதற்குப் பதினைந்து நிமிடங்கள் உள்ளபோதுதான் அவள் தரிசனம் பாடசாலையில் இருக்கும். இது ரகுவுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. ஆனால் இன்று பாடசாலையில் அவளது தரிசனம் இவ்வளவு வெள்ளெனவே இருந்ததை அவனால் நம்பமுடியவில்லை. வகுப்பறையினுள் நான் நுழையும் சத்தம் அவளை தலை நிமிர வைத்தது.

நிமிர்ந்து பார்த்துவிட்டு, ஏற்கனவே மேசைமீது விரித்துக் கிடந்த புத்தகத்தினுள் தலையைப் புதைத்துக் கொண்டாள். நானும் எனது இருக்கையை அடைந்தேன். என்னுள் ஏதோ ஓர் உணர்வு தூண்டிக்கொண்டிருந்தது. துணிவுடன் நானும் எனது இருக்கையை விட்டெழுந்தேன். அவளுக்கு அணித்தாகச் சென்றேன்.

"செங்கமலம்......" அழைத்தேன்.

"ம்............" என்றவாறு அவள் தலை நிமிர்ந்து திரும்பினாள்.

"செங்கமலம்! நேற்று நான் உன்னிடம் வைத்த எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டாயா?" துணிந்து நான் கேட்டேன்.

"ரகு! உங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்ற போராட்டத்தில் உள்ளேன். காரணம் எனது குடும்பத்தின் சமூகநிலை, பொருளாதாரநிலை உங்களுக்குத் தெரியும்தானே!? இந்த

நிலையில் எங்கள் காதலை உங்கள் வீட்டார், உங்கள் சமூகம் ஏற்றுக்கொள்ளுமா? இது நடைபெறக்கூடியதா? இதை நினைக்கும் போது தான் என்னை பயம் கௌவிக் கொள்கிறது'' தயங்கித் தயங்கி செங்கமலம் பதிலளித்தாள்.

"செங்கமலம்! நாமிருவரும் தான் வாழப்போகிறவர்கள். சமுதாயத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. உன்னை எனது வருங்கால துணைவியாக ஏற்றுக்கொண்டால் அதுவே எனக்கு ஓர் பெரிய அதிர்ஷ்டம் என நினைக்கின்றேன்'' ரகு அவளுக்குத் தெம்பூட்டினான். "ரகு! நீங்கள் பணக்காரக் குடும்பத்துக்கு வாரிசானவர். எத்தனையோ நிலபுலங்களுக்குச் சொந்தக்காரர். எனது தந்தையோ உங்கள் வயலில் வேலைசெய்து அன்றாடம் பிழைப்பு நடாத்தும் ஓர் குடிமகன். அதுமட்டுமல்லாமல் சமூகநிலையில் நீங்கள் உயர்குடிப்பிறப்புடையவர். நாங்கள் அப்படியல்ல. இந்த நிலையில் நான் எனது மனதில் வீண் எண்ணங்களையும் சபலங்களையும் வளர்த்துக் கொள்ள முடியுமா? மலையும் மடுவும் ஒன்றுசேர முடியுமா? வானத்து அம்புலியை கையில் வைத்து விளையாட விரும்பும் குழந்தையின் ஆசையைப் போலத்தான் எமது ஆசைகளும் நிராசைகளாகிவிடும். ஏமாற்றமும் துன்பமும்தான் எம் போன்ற ஏழைகளுக்கு மிஞ்சும்'' குரலில் ஓர் தளர்வு தென்படச் செங்கமலம் கூறி முடித்தாள்.

"செங்கமலம்! ஒன்றுமட்டும் என்னால் உறுதியாகக் கூறமுடியும். காதல் என்று கூறி ஏமாற்றும் பிரகிருதி அல்ல நான். எனது செல்வம் சொந்தம் எல்லாவற்றையும் உனக்காகத் தியாகம் செய்யக் காத்திருக்கின்றேன். சமூக அந்தஸ்து, சாதி வேறுபாடு இவையெல்லாம் எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் பெரிதாக அனுசரிக்கப்படுவதில்லை. வளர்ந்துவரும் இளம் சமுதாயத்திற்கிடையில் பிளவை ஏற்படுத்தவென்றே இன்றும் வர்க்கபேத மிச்ச சொச்சங்களை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள் சில பழைய பத்தாம் பசலிகள். சமூகத்தின் எந்த நெருக்குதல்களுக்கும் முகம்கொடுக்க நான் தயாராக உள்ளேன். உனது சம்மதம் மட்டும் இருந்தால் போதும். உன்னைக் கைப்பிடிக்கும் அந்த நாளுக்காகக் காத்திருக்கத் தயாராக இருக்கிறேன்.'' ரகு போதனை ஒன்றைச் செய்து முடித்தான். "ரகு! போடியாருக்கும் தொழிலாளிக்கும் பணத்திலிலுள்ள வேறுபாட்டைத் தவிர வேறு எதில் வேறுபாடு காணப்படுகின்றது. இந்தச் சமூகம் அடிப்படையில் பொருளாதாரத்தை வைத்தே வர்க்க பேதங்களை வளர்த்து வந்துகொண்டிருக்கின்றது. மதங்கள் ஒருபுறம் சமூகத்தைக் கூறுபோட மொழி, இனம், குலம், சாதி என்பவை சமூக ஒற்றுமையைச் சீரழிக்கும் ஆயுதங்களாக இன்று பல அரசியல் வாதிகளாலும், பழமைவாதிகளாலும் கையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது'' தன்னுடைய



கருத்தையும் அறிவுபூர்வமாகத் தெரிவித்தாள் செங்கமலம்.

"ரகு! இளம் வயது, உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் பருவம். இவைதான் இப்போது எமக்கு முன்னிற்கும். நீங்களும் நானும் கூறிய கருத்துக்கள் அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் போது சரியானதாகத் தோன்றும். மேடைப்பேச்சுக்குச் சிறப்பானதாக அமையும். ஆனால் செயற்பாட்டு ரீதியில் பார்க்கும்போது தான் நாம் வாழும் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டுள்ள சமூகத்தின் எதிர்ப்புகள் முளைவிடும். பட்டணத்தை, நகரத்தையோவிட கிராமத்தில்தான் பாரம்பரிய அறியாமைக் கருத்துக்களின் உச்சநிலை அடக்குமுறைக்கான சமூக அங்கத்தவர்கள் உள்ளனர். அவர்கள் அடிமைத்தனத்தையும், அடக்குமுறைகளையும் பாவித்து ஆண்டான் அடிமை போன்ற வேறுபாடுகளைக் கட்டிக்காத்து சகல சுகபோகங்களையும் துய்க்க முடியும் என்ற நிலைப்பாடு உள்ளவர்கள். இவர்களை எதிர்த்து நாம் வெற்றிபெறுவது மிகவும் கடினம். கருங்கல் பாறையைக் கம்புகொண்டு உடைப்பது போலத்தான் இருக்கும். இவர்கள் இங்கு மட்டுமல்ல தாம் அகதிகளாகச் சென்று வசிக்கும் வெளிநாடுகளில் கூட பாரம்பரிய பூர்வத்தன்மையை கட்டிக்காக்கவே முயல்கின்றனர். வெளிநாடுகளில் பிரதேச வாதத்தை வளர்த்து ஒருவரையொருவர் கொலைசெய்வதும், சாதியத்தை வளர்த்து வேறுபாடுகளை விதைப்பதும் தம் நிலை மறந்த இவ் அகதிகள் புரியும் தொழில்களாக இருப்பதை இன்றைய பத்திரிகை வாயிலாக அறிய முடிகிறது'' உணர்ச்சிப் பிளம்பாக பொரிந்து தள்ளினாள் செங்கமலம். "உண்மைதான் செங்கமலம்! ஆண்டாண்டு காலமாகத் தமிழர்களாகிய நாம் நமது மக்களிடையே வளர்த்து வைத்துள்ள வர்க்கபேதங்களும், அதற்காக வலிமை குறைந்தவர்கள் சிந்திய குருதியும் ஒட்டு மொத்தமாகத் தமிழினத்தையே தமது சொந்த மண்ணிலிருந்து துரத்தியடித்திருக்கின்றது என நினைக்கிறேன். இயற்கையின் சாபமோ, இறையின் சாபமோ தான் இன்று தமிழ்மக்களாகிய எமக்கு ஏற்பட்டுள்ள பேரவலங்களுக்கு காரணமாக இருக்கமுடியும் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது'' ரகுவும் தன் கருத்தை வெளிப்படுத்தினான்.

"இந்தப் பின்னணியில்தான் எங்கள் காதலும் நிறைவேறுமா என்ற எண்ணம் என்னைத் தடுமாற வைத்துக்கொண்டிருக்கிறது. தேவையற்ற எதிர்பார்ப்புகள், வளர்த்துக் கொள்ளும் ஆசைகள் எல்லாம் நமக்கு நாமே துன்பத்தை ஏற்படுத்தும் கருவிகளாக உள்ளன'' தத்துவார்த்தமாகப் பதிலளித்தாள் செங்கமலம். "செங்கமலம்! எனக்கு நீ, உனக்கு நான் என்று உறுதிகொள்வோம். இதை என்றும் மாறாது பொறுப்புடன் பேணிக்கொள்வோம். அதற்காகக் காதலர் என்று பட்டம் சூட்டிக்கொள்

ளவோ, வெளியே காட்டிக்கொள்ளவோ தேவையில்லை. விரைவில் படிப்பை முடித்து நான் வேலையொன்றைத் தேடிக்கொள்வேன். கிடைத்ததும் உன் கரம் பற்றுவேன். என்னை நீ நம்பலாம். பெற்ற தாயின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்." ரகு உணர்ச்சிவசப்பட்டு கூறிவிட்டு வகுப்பறையை விட்டு வெளியேறினான்.

செங்கமலத்தின் கண்கள் அவன் போவதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தது. அவள் மனதில் ஒருநிலையான முடிவெடுக்க முடியாமல் தவித்தாள். இருப்பினும் அவள் ஆழ்மனதில் ஒரு நம்பிக்கை துளிர் விடுவதை உணர்ந்தாள். எப்படியிருப்பினும் தற்போது தனது கவனத்தைக் கல்வியில் வைத்திருப்பதே சிறந்தது என்று உறுதிபூண்டாள். அதன்மூலம் சமூக அந்தஸ்தில் உயர்நிலையை அடையமுடியுமென நம்பினாள். பாடசாலை நாட்களும் நகர்ந்து கொண்டிருந்தது. ஆனால் செங்கமலமும் ரகுவும் எவ்வித மனச் சபலங்களுமின்றி பழைய மாதிரி நண்பர்களாகவே பழகினர். ஆனால் வகுப்பிலுள்ள மற்றைய மாணவர்கள் இவர்களுக்கிடையில் ஏதாவது இருக்குமா என ஒரு சந்தேகத்தை மனதுக்குள்ளேயே வைத்திருந்தனர். இவனது நண்பனாகிய கணேசன் ஒருநாள், "ரகு! உனக்கும் செங்கமலத்துக்குமிடையில் ஏதோ "கிசு கிசு" இருப்பதாக கதையொன்று உலாவருவதை என்னால் அவதானிக்க முடிகிறது. அதில் ஏதும் உண்மை இருக்கிறதா?" கணேசன் துணிந்து ரகுவிடம் கேட்டான்.

"நண்பா! ஒரு ஆணும் பெண்ணும் நல்ல நண்பர்களாக இருக்க முடியாதா? ஒரு ஆணும் பெண்ணும் கதைத்துப் பழகுவதைக் கண்டவுடனேயே நம்ம சமுதாயம் பழிசுமத்துவதற்கென்றே காத்திருக்கிறது" தனது உள்ளக்கிடக்கையை மறைத்துக் கூறினான் ரகு.

"எனக்கும் அப்போதே ஒரு சந்தேகம் இருந்தது. ஆனால் இது பற்றிக் கேட்பதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன்" கணேசன் கூறினான்.

"இப்படியான வீண்வதந்திகளால் சிலரது வாழ்க்கையில் கல்வி தடைப்படும் சந்தர்ப்பம் கூட ஏற்படலாம்" ரகு மனம் வருந்தக் கூறினான். "சிறந்த அறிவும், புத்திநுட்பமும் கொண்ட ஒரு நண்பியை இவர்களுக்காக இழக்கமுடியாது கணேசா. இருப்பினும் நான் இனி சற்று எச்சரிக்கையுடன் நடந்து கொள்கிறேன்" ரகு பதிலளித்தான்.

"எதற்கும் நீ செங்கமலத்துடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டால் நல்லது" கணேசன் அன்பாய்க் கூறினான்.

"உடனடியாகக் குறைத்தால் அவள் என்ன நினைப்பாளோ தெரியாது. படிப்படியாகத்தான் அதைச் செய்ய வேண்டும் கணேசா" ரகு கூறினான்.

**(தொடரும்...)**



குறுங்கதை

# கல்யாணம் வரை...

— வேல் அமுதன் —




**பே**ரம்பலத்திற்கு பெரிய ஆனந்தம். வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களோடு வந்துகொண்டிருக்கும் அவரது லொறி கொட்டாஞ்சேனையைக் கடந்து, மருதானையையும் கடந்து, மேற்கொண்டு பயணித்துக் கொண்டிருக்கும் இடங்கள் வலுஜோர்! நாலா பக்கமும் பார்த்து பார்த்து ரசித்துக் கொண்டு வருகின்றார் பேரம்பலம்.

கறுவாத்தோட்டம் - பம்பலப்பிட்டி இப்படியான இடங்கள் உயர்தரம். பேரம்பலத்திற்கு மனம் இருப்புக்கொள்ளவில்லை. அவரின் மனக்குதிரை தாவிப் பாய்ந்து, நான் மகனை B.sc, M.sc எனப் படிப்பித்தது நல்லாகப்போச்சு. அதுவும் வெள்ளவத்தையில பெண்ணெடுத்தது இன்னம் திறம். அதைவிடப் பொருத்தம் சம்மந்தி வியாபாரம், வசதியானவர், வீடு குடுத்திருக்கிறார். எல்லாவற்றையும் விடத்திறம் சம்பந்தியின் மனம். அவர் இனி ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்லை. ஏதேன் என்னவேன் எண்டால் நாங்க இருக்கிறம். சொல்லாமல் பறையாமல் எங்கடை வீட்டுக்கு வரலாம்.... இப்படி என்னன்னவோ வாக்குக் கொடுத்ததை இப்போது பேரம்பலம் நினைத்து நினைத்து அகம் மகிழ்கிறார்....

பேரம்பலத்தின் மனம் இன்னும் கரைபுரண்டோடுது. இனி ராஜயோகம் தான் - வேளைக்கு வேளை தேநீர் - அறுசுவை தின்பண்டம் - சௌகரிய வாழ்க்கை எனக் கனாக்காணும் வேளை நடப்புக் காட்டிய கொட்டாஞ்சேனை வீட்டுக்காரனும் கொளுவல் வந்தவுடன் வீட்டைக்காலிபண்ணி என்ரை எழுப்பத்தைக் காட்டிப்போட்டன் எனவும் புளகாங்கிதம் அடைகிறார்.

ஹோல் றோட்டில் பயணித்த சாமான் லொறி, மெயின்றோட்டை விட்டிறங்கி அந்த குறுக்கு றோட்டில் சிறிது தூரம் பயணித்து, அழகான வீட்டு வாசலில் நிற்கிறது.

லொறி நிற்கமுன் குதித்திறங்கிய பேரம்பலம், "தம்பி! சிவா, தம்பி சிவா" என சத்தம் வைக்கிறார்.

"ஆரது? அங்கை என்ன சத்தம்? சிவகுமார் வீட்டில் இல்லை" என வீட்டினுள்ளிருந்து சத்தம் வந்தது.

சத்தத்தைத் தொடர்ந்து பேரம்பலத்தின் சம்பந்தி துரைசிங்கம் பிரசன்ன மானார்.

"நான் எங்கடை கொட்டாஞ்சேனை வாடகை வீட்டை விட்டிட்டு சாமான் சக்கட்டையோடை வந்திட்டன். சாமான் இறக்க கொஞ்சம் உதவி செய்விங்க ளென்டால் பெரிய ஆறுதலாக இருக்கும்" - பேரம்பலம் வேண்டுகிறார்.

"இஞ்சை எங்கடை வீட்டிலை சாமான் வைக்க இடமில்லையே" - சம்பந்தி எடுத்தெறிந்து பேசுகிறார்.

"என்ன சம்பந்தி? வீட்டிற்கு நோட்டீஸ் குடுத்திட்டு, ஆள்பேருக்கும் சொல்லிப்போட்டு வெளிக்கிட்டு வந்திட்டம். மசினியும் இரண்டு பிள்ளைகளும் பின்னாலை ஓட்டோவில வருகினம்"

"அதுக்கு நான் இப்ப என்ன செய்ய? மூன்டறை சின்ன வீடு இது!"

"அப்ப நான் என்ன செய்வது? எங்க போவது?"

"எங்கையெண்டாலும் போங்கோ" **- யாவும் கற்பனையல்ல.**

# கர்ப்பூர மேனியல்லோ மாது!

ஆறிலொரு சாவுவரும் நூறிலொரு சாவுவரும்
ஆறறி வார்விளை யாட்டு - பாரிலொரு
மேடையொன்றைப் போட்டுவிட்டு ஆடுகின்ற ஆட்டமதைப்
பாடையிலே கட்டிமெள்ளத் தூக்கு!

மேல்மணக்கச் செண்டுகளும் தோல்நிறத்த பெண்டுகளும்
கால்வலிக்க ஆடுகிறாய் ஆட்டம் - வால்சுருட்டி
தூங்குநிலை வந்தபின்னால் தொட்டவளும் கிட்டவராள்
தேவையா உனக்கிந்த வாட்டம்?


குத்துமுலை நிமிர்ந்திருக்க கூர்பிளக்கும் வேல்விழிகள்
செத்துவிட்டால் நாறிவிடும் போது - அத்தனையும்
பார்த்துநிதம் வேகுகிறாய் பஞ்சணையில் மோதுகிறாய்
கர்ப்பூரமேனியல்லோ மாது!

மேல்நோக உழவடித்துக் கண்விழித்துக் காத்திருந்து
கால்வாயில் தண்ணிவிட்டுப் பார்த்தாய் - வயல்விளைய
கண்டவனும் நேரமென்று கதிரறுத்துப் போவானே
மண்டுக மாய்நிற்பாய் வேர்த்து.

**தி.சிவலிங்கம்**




## பதிவு




★ மட்டக்களப்பிலிருந்து க.கிருபாகரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் **'தென்றல்'** காலாண்டு சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு விழா 05.04.2009 அன்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் 'தென்றல்' ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

★ 'தினக்குரல்' பத்திரிகையின் கிழக்குமாகாண வெளியீட்டை 23.04.2009 அன்று வெளிக்கொணரும் முகமாக வாசகர்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் 18.04.2009 அன்று மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபக தலைவர் திரு.எஸ்.பி.சாமி அவர்களும் இக்கலந்துரையாடலின் போது சமுகமளித்து விளக்கங்களை அளித்தார்.

★ கல்முனை கலை, இலக்கிய நண்பர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் - 2009, கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையில் 02.05.2009 அன்று திருமதி.க.லோகிதராஜா (கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவர்) தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ. மத்தியூ, எழுத்தாளர் இரா.நாகலிங்கம் (அன்புமணி), கவிஞர் மு.சடாட்சரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



★ தர்காநகர் படிப்பு வட்டத்தினரால் தர்கா நகரில் கடந்தவருடம் 23.11.2008 அன்று வெளியிடப்பட்ட கலாபூஷணம் கவிஞர் ஏ.இக்பால் அவர்களின் **'அயிம்பது வருட இலக்கிய ஆவணம்'** நூலின் அறிமுக விழா 02.05.2009 அன்று அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கத்தில் நடைபெற்றது.



★ கிழக்குப்பல்கலைக்கழக பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களின் மணிவிழா 03.05.2009 அன்று கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்தில் திரு.காசிபதிநடராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **'கல்விச்செல்வம்'** எனும் மணி விழாமலரும் வெளியிடப்பெற்றது.

★ அண்மையில் காலமான மூத்த இலக்கியவாதிகளான அமரர்கள் கவிஞர் முத்தழகு, கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி ஆகிய இரு எழுத்தாளர்களின் இழப்புக்கான அஞ்சலிக்கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையின் ஏற்பாட்டில் 10.05.2009 அன்று கல்லடி, மட்டக்களப்பு பாடுமீன் உணவகத்தில் பாவலர் சாந்திமுஹைதீன் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் முத்தழகு பற்றி திரு.மு.இராஜரெட்ணம் அவர்களும், கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி பற்றி திரு.இரா.தவராஜா அவர்களும் உரையாற்றினர்.



முத்தழகு 20.11.1933 - 17.03.2009

வெற்றிவேல் விநாயகமூர்த்தி 15.09.1924-12.04.2009

★ திருமதி.விஜயலெட்சுமி யோகேஸ்வரநாதனின் **'மண்டூர் முருகன், கதிர்காமக்கந்தன் பாமாலைகள்'** எனும் நூலின் வெளியீட்டு விழாவும் **'செங்கதிர்'** சஞ்சிகையின் அறிமுகவிழாவும் 31.05.2009 அன்று மண்டூர் ஸ்ரீ இராமகிருஸ்ண கலாசாரமண்டபத்தில் மண்டூர் கலை இலக்கிய அவையின் ஏற்பாட்டில் தலைவர் கவிஞர் மண்டூர் தேசிகன் தலைமையில் நடைபெற்றது.

★ ஹட்டன் மதுரத்தமிழ் கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் 'செங்கதிர்' சஞ்சிகை அறிமுகவிழா 13.06.2009 அன்று ஹட்டன் நகர சபை மண்டபத்தில் கவிஞர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

✦ வாய்மொழி இலக்கியமாகப் **'பழமொழிகள்'** வழக்கிலுள்ளன. பழமொழிகள் சிந்தனையைத் தூண்டுபவையாகவும் - அறிவுரை பகர்வனவாகவும் - கருத்தொன்றை மிகக் காத்திரமாகச் சொல்லும் கவிதா நேர்த்தியுடனும் - குறுகச் சொல்லி நிறையப் பொருள்தரும் வடிவினையுடையதாகவும் விளங்குவதை நாம் அறிவோம். நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை என்னும் நான்கினை இலக்கணமாகக் கொண்டது பழமொழி எனத் தொல்காப்பியச் சூத்திரமொன்று கூறும். நாட்டார் இலக்கியத்தின் முதுகெலும்புப் பகுதியாகப் பேசப்படும் இப்பழமொழிகளை யார் ஆக்கினார்கள் என்பது தெரியாது. அவற்றை நாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப எடுத்தாளுகிறோம். சில பழமொழிகள் கவிதை வரிகளைப் போல இலக்கியச் செழுமையுடன் இலங்குவதைக் காணமுடியும். இத்தகைய பழமொழிப் பயணத்தில் சில **'புதுமொழி'** களைச் செங்கதிர் அவ்வப்போது அறிமுகம் செய்யும். ஆக்குபவர்கள் அவற்றைச் செங்கதிருக்கு அனுப்பி வையுங்கள்.

**புதுமொழி' 03**

**" மருந்துச் செலவைச் சுணக்கிடாதே**
**திருமணச் செலவைக் கணக்கிடாதே!"**

**(ஆக்கம் : வேல் அமுதன்)**



# சிலேடைப் பாடல்கள்

தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை தரும் விடயங்களில் ஒன்று சிலேடைப் பாடல்கள். இப்பாடல்களில் பெரும்பகுதி காளமேகப் புலவரால் இயற்றப்பட்டது. **'செங்கதிர்'** வாசகர்களின் செவிப்புலன் இன்பம் கருதி காளமேகப் புலவரின் பாடல் ஒன்றைத் தருகின்றேன். புரியவில்லையாயின் விடையும் கீழேயுள்ளது. இயலக்கூடிய அளவில் விடுவிக்க முயற்சி எடுங்கள். அதன்பின்பே விடையை அவதானியுங்கள்.

**சிலேடைப் பாடல் :**

**கொம்பினிலே கொம்பொடிந்தால்**
**கோ பால் ஈயும்**
**கோயிலிலே ஈ பறந்தால்**
**கோன்கை சேரும்**
**அம்பிகையின் கை ஒடிந்தால்**
**பங்கைக் கேட்கும்**
**அம்மானின் காலொடிந்தால்**
**அருள் பாலிக்கும்**
**கம்பிடையே ஐந்திணைந்தால்**
**காமன் வில்லாம்**
**காவலிலே காலகன்றால்**
**காலே யாகும்**
**வம்பிடையே சாவிருந்து**
**நுடமேயானால்**
**வாசமிகு மருந்தாகும்**
**வகை சொல்வீரே.**

**விடை :**

'கொம்பு' என்னும் சொல்லில் 'ெ' என்னும் கொம்பு இல்லாவிட்டால் 'காம்பு' ஆகும். காம்பின் மூலம் 'கோ' என அழைக்கப்படும் பசுமாடு பால் கொடுக்கும்.

'கோவில்' என்னும் சொல்லில் 'யி' என்னும் எழுத்து நீக்கிவிட்டால் 'கோல்' ஆகிவிடும். கோல் - கோன்கை சேரும் - கோன் என்பது அரசனையும் மாடு மேய்க்கும் மனிதனையும் குறிக்கும். மாடு மேய்க்கும் மனிதனிடம் வெறுங்கோலாய் இருப்பது மன்னவனின் கையில் செங்கோல் ஆகும்.

'அம்பிகை' என்னும் சொல்லிலுள்ள 'கை' என்னும் எழுத்து இல்லாவிட்டால் 'அம்பி' என்று வரும். அம்பி என்றால் தம்பி. தம்பி தனது வாழ்வில் துன்பம் வந்தால் பங்கு கேட்பான் என்பது பொருள்.

அம்மான் என்னும் சொல்லில் 'ா' என்னும் கால் எழுத்து நீக்கினால் 'அம்மன்' என்றாகும். அம்மன் அருள் பாலிப்பாள். 'கம்பு' என்னும் சொல்லின் இடையே தமிழில் ஐந்து என்று குறிப்பிடப் பயன்படும் தமிழ் எழுத்தாகிய 'ரு' இணைந்தால் கரும்பு ஆகும். கரும்பு காமன் கை வில்லாகும்.

'காவல் என்னும் பெயரிலே' ¼ என்று தமிழில் குறிக்கப்பயன்படுத்தும் 'வ' என்னும் எழுத்து அகன்றுவிட்டால் வெறும் 'கால்' தான் மிஞ்சும். 'வம்பு' என்னும் சொல்லினிடையே 'சா' என்னும் எழுத்து இருந்து அதற்குக் ('ா') இல்லாமல் முடமாகி வெறும் 'ச' மட்டும் நுழைந்தால் 'வசம்பு' என்றாகும். வசம்பு வாசனை மிக்க தமிழ் மூலிகை மருந்து.

திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்

# ஐயரின் ஆமைக்குற்றி

ஆரையூர்த்தாமரை.

கோயிலுக்குப்
போகும் போதெல்லாம்
ஒரேயொரு பொருள் மட்டும்
என்னைப் பார்த்துக்
கண்சிமிட்டும் நேரம்
புரியாத ஒரு ஆனந்தம்
புதிதாக ஒரு அமைதி - என்னுள்
பொசுக்கென்று பிறக்கும்.

எத்தனையோ
அலங்காரங்கள் கொண்ட
அழகுப் பொருட்களாலும்
அழகிய வண்ணங்களினாலான
கோயிற் சுவர்களும்
கோபுரங்களும் - அதனுள்
குடியிருக்கும் தெய்வங்கள்.
கோடித் தவமிருந்தும் கவலைகள்
ஓடிப் போனதாகவும் தெரியவில்லை.
புதிதாக வராமலிருந்ததும் இல்லை.

இந்தக்
குவலயபீடத்தில்
ஆலயம் - ஒரு
அழகான சிற்பக்கூடம் - ஒரு
அழகான ஓவியக்கூடம் - இங்கு
இல்லாத நிம்மதிக்காக
இல்லாத இறைவனைத்
தேடிவரும் போது எல்லாம் - நான்
தேடாத தொடாத அது
கண்சிமிட்டும். ஓரக்
கண்ணால் அதன்
பேரழகை நானும் இரசிப்பேன்.

என் இரசிப்பிற்குரிய
அந்தப் பொருள்
ஐயர் ஒவ்வொரு முறையும்
யாகம் செய்யுமுன்
அமர்ந்திருக்கும் அழகிய
வேலைப்பாடுகளாலான
மரத்தில் செதுக்கப்பட்ட
ஆமைக்குற்றி.

நான்கு கால்களையும்,
ஒரு தலையையும்
ஒரே சமயத்தில் - தன்
ஓட்டுக்குள் இழுக்கும்
ஆமையைப் போன்று
யாகத்தின் முன்
ஐம்புலன்களையும்
ஐயர் அடக்குவதாகவொரு
ஐதீகமாம்.

ஊர்ந்துசெல்லும்
கூர்மத்திற்குப் பொன்னாபரணங்கள்
பூட்டியது போலழகு
காட்டிநிற்கும்
ஐயரின் ஆமைக்குற்றி
கோயில் வாசலைக்
கடந்து வந்த பின்பும்
விடாப்பிடியாய் உட்கார்ந்திருக்கும்
ஆழ்மனதில்.

அப்போதெல்லாம் - புத்தி
லேசாகக்கூட
லௌகீக வாழ்க்கையில் திரும்பாது
லயித்துப் போயிருக்கும் அமைதியில்.



# விளாசல் வீரக்குட்டி

இதென்னடா தம்பிமாரே தீத்தக்கரபோல உம்பாரப்பட்ட சனமெல்லாம் நிண்டு, என்னவோ புதினம் பார்க்கிற மாதிரிக்கிடக்கு? என்ன நடந்தது? ஆரும் குளத்தில தாண்டு செத்துப் பொயித்தாங்களாமா?

என்ன? பண்டிவெட்டிப் பங்கு போடுறாங்களா? எங்கால உங்களுக்கிந்தப் பண்டி? ஆரு சுட்ட? அடடே வெள்ளாமயத் தின்னவந்த பண்டிக்கிளைக்குச் சுருக்குவச்சிப் புடிச்சதா? அதப்பாக்கிறதுக்கா இவ்வளவு சனக்கிள? என்னதானெண்டாலும் சிதம்பரம் நம்மட சனம் இன்னும் திருந்தல்ல மச்சான்! நம்மட ஊரில நடக்கிற நூல்வெளியீட்டு விழா, அறிமுக விழா, விமர்சன விழா எண்டு றோட்டுறோட்டா ஸ்பீக்கரில அறிவிச்சாலும் ஒரு சனமும் போகாதுகள். இந்தச் சீத்துவத்துக்க நம்மட ஊர்ப் பொடியனொருவன் துணிஞ்சி மாசாமாசம் ஒரு புத்தகத்தை வெளியிடுறான் வாங்கிப் பாத்தனீங்களா? படிச்சனீங்களா? கேள்வியாவது பட்டிருக்கிறயளா?



கேள்விப்படயுமில்லயா? சரியாப் போச்சி. நாங்களும் படிச்சனாங்கதான், உத்தியோகம் பாக்கிறனாங்கதானெண்டு வெளியால சொல்லிராதீங்க. வெக்கக்கேடு.

ஒருவருஷத்துக்கு மேலா ஒழுங்கா வெளிவருகுது. நம்மட ஊருக்குப் பொருத்தமா **'செங்கதிர்'** எண்டு பெயர் வைச்சிருக்காங்க. மச்சான் சிதம்பரம் நீயாவது பாக்கல்லையா? அதுதானே பாத்தன். உனக்கு ஒவ்வொருநாளும் எதையாவது வாசிக்காட்டிப் பத்தியமில்லயே! எப்படிப்புத்தகம்? சோக்காயிருக்கென்ன? அம்பது ரூபா வில. நல்ல மலிவும் பொலிவும். நல்ல நல்ல கத, கட்டுர, கவிதெண்டு சொல்லி வேலல்ல.

எல்லாம் நம்மட நம்மட ஊராக்கள்தான் எழுதுறாங்க. "தேன் தேன் தேன் நான் என்னை மறந்தேன்". எண்டொரு பாட்டு இப்பெல்லாம் அடிக்கடி றேடியோவில போடுறாங்கெலுவா? அதவிடச் சோக்கான கொம்புத்தேன் மச்சான் செங்கதிரில வாற விசயங்களெல்லாம்.

இன்னொண்டு உனக்குத் தெரியுமா சிதம்பரம்? மே மாதம் முதலாம் திகதி நம்மட தொழிலாளர் தினம் வந்தெலுவா? அதுக்கு இஸ்பெசலா மல நாட்டுச் சிறப்பிதழெண்டு வெளியிட்டிருக்கிறாங்க. ச்சா ஸ்பெசலெண்டா ஸ்பெசல்தான் மச்சான். நமக்குத் தெரியாத விசயமெல்லாம் அதில வந்திருக்கு.

நீயென்ன பண்டிறச்சி வாங்க வந்தனீயா? இல்லத்தானே? புறகேன் இவடத்த நிண்டு மினக்கெடுறா? வாவன் என்னோட. ரெண்டுபேருமாப்போய் ஒரு வருசச் சந்தாவக் கட்டிப்போட்டு வருவம்! 750/= ரூபா எனக்குனக்கெல்லாம் பெரிய காசாடா மச்சான்? எவ்வளவத்தான் அறம்புறத்துச் செலவழிக்கிறம். நம்மட ஊரில இருந்து வாற புத்தகத்த உழுத்தாட்டாம நாமதான் மச்சான் உயத்தியுடோனும். என்ன? எங்கபோய் ஆரிட்டக் காசி கட்டுறெண்டு உனக்குத் தெரியாதா? கொழும்பு, கண்டியெண்டுபோய் தரகர்மாருக்கு லெச்சக்கணக்கில காசக்குடுத்து உண்ட ரெண்டு பொடியனுகளையும் வெளியால அனுப்பின உனக்கு இந்த சில்லறக் காசக்கட்டுறதுக்கா வழிதெரியா? நீ பயப்படாம என்னோட வா.

இலக்கம் 19, மேல்மாடித்தெரு, மட்டக்களப்புதான் விலாசம். மேல்மாடியெண்டதும் அஞ்சாம் மாடிநினைப்பு வந்தித்துப் போல... பயப்புடாம வாடா மச்சான்.


**மிதுனன்**

# திருமணத்தில் ஒரு முன்மாதிரி

இலக்கிய ஆர்வலர் திரு.கே.பொன்னுத்துரை அவர்களின் புதல்வி செல்வப்பிரியா + வசிகரன் திருமண வரவேற்பு நிகழ்வு 07.06.2009 அன்று தெகிவளை வரவேற்பு நிகழ்வு Shahran Banquet Hall இல் நடைபெற்றது. திருமண வரவேற்பு நிகழ்வின் ஒரு அங்கமாக அந்தனி ஜீவா அவர்களினால் தொகுக்கப்பெற்று மலையக வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்ட குறிஞ்சி தென்னவனின் குறும் பாக்கள் அடங்கிய **'குறிஞ்சி தென்னவனின் குறும் பூக்கள்'** எனும் நூல் வெளியிடப் பெற்றதுடன் நிகழ்வுக்கு வந்திருந்தோருக்கு அவை இலவசமாகவும் வழங்கப் பட்டன.








*செங்கதிர் மே மாத இதழை நண்பர் அந்தனி ஜீவா அனுப்பி 17.06.2009 இல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சியடைந்தேன். நான் 2003 இல் கொழும்பு, அட்டன், நுவரெலியா, கண்டி பின்னர் A9 ஊடாக யாழ் சென்று வந்தேன். அப்போது அந்தனி ஜீவா, முரளிதரன் அறிமுகமானார்கள். மீண்டும் 2006 ஜனவரியில் மத்தியமாகாண தமிழ்ச் சாகித்திய விழாவில் கலந்துகொள்ள நுவரெலியா வந்தேன். நண்பர்கள் அந்தனி ஜீவா, சாரல்நாடன் நன்முறையில் உபசரித்தனர். 'ஞானம்' இதழிலும் மலேசிய மடல் எழுதி வருகின்றேன்.*

*'செங்கதிர்' மலையகச் சிறப்பிதழ் நன்முறையில் வந்துள்ளது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பான பதிவுகள் காணாமற் போய்விடக்கூடாது என்பதில் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும்.*

*நான் முன்பு மலேசிய - இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றினை நடத்தலாம் என்று திட்டமிட்டு பல கடிதங்கள் எழுதியும், அங்கிருந்து (மலையகத்திலிருந்து) ஏற்பாடுகள் கவனிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.*

*இருப்பினும் வாய்ப்பிருந்தால் கொழும்பு, அட்டன், நுவரெலியா, கண்டி, மட்டக்களப்பு என சில ஊர்களில் இதுபோன்ற நிகழ்வுகளை நடத்தி இருநாட்டு இலக்கியத்திற்கும் தொடர்புறவை வலுப்பெறச் செய்யலாம்.*

**ஆ. குணநாதன்**
செயலாளர் - மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம்.
No.25, Jalan Bendahara 10/2,
Taman Bendahara, 45000 Kuala Selangor, Selangor D.E,
Malaysia.

**அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே!**

*காரைதீவில் விபுலாநந்தர் சிலை திறப்பு விழா கோலாகலமான முறையில் நடைபெறுகிறது. அதையொட்டி திரு.சற்குணம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு சிறப்பு மலரொன்று வெளியிடப்படுகிறது. பல்வேறு அறிஞர் பெருமக்களின் அரிய கட்டுரைகள், ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களின் பாமலர்கள் அம்மலரை அழகு படுத்துகின்றன. இம்மலரில் உணர்ச்சிக் கவிஞ*

ரின் "கவிநாடு தந்த கவி" எனும் கவிதையும், மகாகவி எழுதிய கவிதையும் பிரசுரமாகின்றன. அத்தோடு "கல்முனைப்பூபால்" என்னும் பெயரில் ஒருவரும் கவிதை வரைகின்றார். "..........காரேறு முகூர்க்கன்னி மகள்! பேரார்வ இன்ப நெகிழ்வில் இணைந்தாள். அதன் விளைவால் கண்டது ஞாலம் கலை" எனும் வரிகள் எனக்குத் தெரிகின்றன. இவ்வாறு எழுதிய கல்முனைப்பூபால் மீது எனக்கு அபிமானம் வருகின்றது. இவர் யார்? யான் பிறந்த மண்ணில் தோன்றியிருக்கும் இக்கவிஞரைச் சந்திக்கவும் உரையாடவும் வாய்ப்புக் கிடைக் காதா என்ற ஆதங்கம் வருகின்றது.

அப்போதெல்லாம் யானும் கவிதை எழுத ஆரம்பித்து சில கவிதைகள் சஞ்சிகை களிலும் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியும் இருந்தன. வீரகேசரி மாணவர் உலகில் விஞ்ஞான அடிப்படையிலான கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த யான் வானொலி மஞ்சரியில் "கொழும்பு சென்றேன்" எனும் நகைச்சுவைக் குறுங்காவியமொன் றையும் எழுதியிருந்தேன். கமு/தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராயிருந்த 1973/74காலப்பகுதி அது.

கல்முனை எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஒன்று கூடிக் கவியரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அக்கவியரங்கில் கலந்து கொள்ளவருமாறு எனக்கும் அழைப்பு வருகிறது. "கொழும்பு சென்றேன்" எனும் கவிதையுடன் கவியரங்கில் பங்குபற்றச் சென்றேன். இதுவரைகாலமும் அக்கரைப்பற்று, தம்பிலுவில் பகுதிகளில் கவி யரங்கில் பங்குபற்றியிருந்த யான் கல்முனையிலும் பங்குபற்ற ஆர்வமுடன் புறப்பட்டேன். அரங்கத்தில் பழுத்த பல கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் சந்திக்கக்கூடியதாயிருந்தது. அரங்கத் தலைவராக பிரபல முஸ்லீம் கவிஞரான "ஈழமேகம்" பக்கீர்த்தம்பி ஆசிரியர் இருந்தார். கவிஞர் மருதூர்வாணன், பஸீல் காரியப்பர், பாலமுனை பாறூக் இவர்களுடன் கல்முனைப்பூபாலும் வந்திருந்தார். அன்றுதான் நேரடியாக இவர்களைச் சந்தித்து அறிமுகமாகிறேன். ஈழமேகத்தின் கவிப்பொழிவு அறிமுகத்தோடு ஒவ்வொருவராகக் கவிபாடு கின்றோம். அன்று கல்முனைப் பூபாலும் வந்திருந்தார். அன்றுதான் நேரடியாக இவர்களை சந்தித்து அறிமுகமாகின்றேன். பலதும் பத்தும் உரையாடிவிட்டு வீடு திரும்புகின்றோம்.

கல்முனைப் பூபாலுக்குக் கவிதையிலேயே ஒரு மடல் வரைகின்றேன். "கல்முனைப் பூபால் அண்ணா! கவியினைக்கேட்டேன் அன்று!" எனத்தொடங்கும் அக்கவிதையை பூபாலுக்கு அனுப்பி வைக்க, அவரிடமிருந்து பதில் கவிமடல் வருகிறது.

கவிதை எழுதும் ஆற்றலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றியும் எனக்கு அவர் அறிவுரை பகர்கிறார். "....... அக்கரைச்சக்தித் தம்பி அன்று நீ படித்தளித்த, சக்கரை நிகர்த்த அன்புத் தமிழ் கண்டேன். சுவைத்தேன் தம்பி....." எனும் வரிகளும் அக்கவிதையில் இருந்தன. "....... நன்றாகச் சிந்தி அப்போ நவையெனப் பிறக்கும் பாடல்...." என அவர் எழுதியிருந்தார். கவிதைக்கான கருப்பொருளை மனதில் வைத்து நன்றாகச் சிந்தித்தால் பாடல் பிறக்கும் எனும் கருத்திலேயே அவர் எழுதினார்.

இவ்வாறு ஏற்பட்ட தொடர்பு எனக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது. பல விடயங்கள் பற்றியும் கவிதைகள் யாத்து வந்தேன். அந்த நேரம், அக்கரைப்பற்றுக் கோட்டக்கல்வியதிகாரியாயிருந்த திரு.க.அ. பாக்கியன் அவர்கள் களுவாஞ்சிக்குடி



சைவமகாசபையினரால் எடுக்கப்பட்ட விழாவொன்றுக்கு என்னையும் வருமாறும் கவியொன்றை அரங்கேற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். "இந்து சமயமும் எங்கள் சமூகமும்" எனும் தலையங்கத்தில் கவிதையை எழுதிக்கொண்டு களுவாஞ்சிக்குடி விரைந்தேன். அன்றைய விழாவை அலங்கரிக்க இந்தியத் தமிழகத்திலிருந்து "கலைமகள்" ஆசிரியர் கி.வா.ஜெகந்நாதன் வருகை தந்தி ருந்தார். அவர் தலைமைதாங்க கவியரங்கம் நடைபெற்றது. இவ்வரங்கித்திற்கு பாண்டியூரன், ஜீவாஜீவரெத்தினம் போன்ற பிரபல கவிஞர்களோடு கல்முனைப் பூபாலும் வந்திருந்தார். சைவமகாசபை அரங்கத்தில் எமது கவிதை மழை 'சோ' எனப்பொழிந்தது. கி.வா.ஜெகந்நாதனின் பாராட்டுதல்களுடன் கவிஞர்கள் யாவரும் திரு.பாக்கியன் அவர்களுக்கு நன்றி பாராட்டிவிட்டு வீடு திரும்ப ஆயத்த மானபோது நேரமோ இரவு 10.30க்கு மேல் ஆகிவிட்டது. இனிப்போவதற்கு பஸ் இல்லை. அனைவரும் நடந்தே செல்வது எனத் தீர்மானித்து நடையை ஆரம்பித்தோம். இது போழ்து கவிஞர்கள் தங்களது அனுபவங்களை விபரித்துக் கொண்டே வந்தனர். கவிஞர் நீலாவணனின் பாசறையில் பயிற்சி பெற்ற அவர்களின் அனுபவங்கள் நடந்த களைப்புக்கு ஆறுதலளித்தன. எத்தனை பெருங் கவி ஞர்களோடு 8 மைல் நடந்து வந்துள்ளேன் என்று நினைக்க 35 ஆண்டுகளின் பின்பும் மனதிற்குச் சுகமாக இருக்கிறது. உணர்ச்சிப் பெருக்கோடு பாண்டியூ ரனும், ஜீவா ஜீவரெத்தினமும் நீலாவணனின் கவிதைகளைப் பற்றியும் அரங்கிலே அவர் முழங்கிய ஆழமான கருத்துக்கள் பற்றியும் கூறிக்கொண்டே வந்தார்கள். உவமைகளைச் சரியாகவும் பொருத்தமாகவும் கையாளத்தக்க உணர்ச்சிக் கவிஞரல்லவா நீலாவணன்? அவரோடு இணைந்து பணியாற்றிய கவிஞர்களோடு சில மணிநேரம் செலவழிக்கக்கிடைத்ததே யான் செய்த பாக்கியம்.

அதன்பின் கல்முனைப் பூபாலுடன் தொடர்பு அற்றுப்போய் விட்டது. யானும் மேற்படிப்புக்காக பேராதனை செல்லவேண்டி ஏற்பட்டுவிட்டது. எனினும் பூபாலின் ஞாபகம் விட்டுப்போகவில்லை. 'செங்கதிர்' இதழில் பூபாலைப்பற்றிய கட்டு ரையை வாசித்தபின்புதான் பூபால் - நீலாபாலன் எனும் பெயரோடு மலையகத்தில் வதிகின்ற விடயம் தெரியவந்தது. அப்பப்பா! நீலாபாலன் எத்தனை சாதனை செய்திருக்கிறார்? ஆளுமையும் அனுபவமும் மிக்க பழுத்த கவிஞரான அவரை செங்கதிர் சிறப்புக்கட்டுரையில் வெளிக்காட்டியது செங்கதிருக்கும் அதன் ஆசிரியருக்கும் மிகப்பெருமை தருவதாகும்.

**- அக்கரைச்சக்தி -**

---

■ மலையகச் சிறப்பிதழ் பார்த்து ஆச்சரியப்பட்டேன் . அதிர்ச்சியுமடைந்தேன். காரணம் அட்டையில் எனது படத்துடன் மலையகத்தை வாழ்விக்க வந்த மகான் நடேசய்யரின் படம், அத்துடன் மலையகத்துக்கு மாத்திரமன்றி, இலங்கை திருநாட்டில் முன்னோடி பெண் கவிஞரான மீனாட்சி அம்மையார்.

இந்த மேதைகளைப் பற்றி அடிக்கடி எழுதியவன் என்ற வரிசையில் திருப்தி அடையலாம். செங்கதிர் சிறப்பிதழ்மூலம் மலையகத்திற்கும் மட்டக்களப்பிற்கும் இலக்கிய பாலம் அமைத்துவிட்டீர்கள்.

மலையகத்தின் புதிய தலைமுறை உங்களுக்கு நன்றிசொல்ல கடமைப்பட் டுள்ளது. இன்றைய தலைமுறைக்கு செங்கதிர் மலையகச் சிறப்பிதழ் ஒரு வரலாற்று பதிவாகும்.

**அந்தனி ஜீவா**

57, மகிந்த பிளேஸ், கொழும்பு - 06.

## "செங்கதிர்" கட்டண விபரம் : (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| ஓராண்டுக் கட்டணம் | 750/- | 500/- | US $ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US $ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப் படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US $ 50 |
| | அரை | 3000 | 1000 | US $ 30 |
| முன் அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US $ 30 |
| | அரை | 2000 | 750 | US $ 20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US $ 20 |
| | அரை | 1500 | 500 | US $ 15 |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

**வங்கி** : மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.

**கணக்கு இல** : 113100138588996 (நடைமுறைக்கணக்கு)

**காசுக்கட்டளை** : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.


காசோலைகள் / காசுக்கட்டளைகளை **த.கோபாலகிருஷ்ணன்** என்று பெயரிடுக. அல்லது பணமாக ஆசிரியரிடம் நேரிலும் வழங்கலாம்.

**எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி :**


**ஆசிரியர், 'செங்கதிர்'**
இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.




# திருமண சேவை



**தங்கள் தேடல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மணமக்களா? வேல் அமுதனிடம் இந்நாடுகளின் இன்றைய கையிருப்பு 187 மணமகன் 42 மணமகள்!**



இன்னுமேன் தயக்கம்?
இன்றே-
சுயதெரிவுமுறை முன்னோடி,
மூத்த புகழ்பூத்த, சர்வதேச,
சகலருக்குமான தங்கள்
திருமண ஆற்றுப்படுத்துநர்,
தனிநபர் நிறுவநர்
குரும்பசிட்டியூர்,
மாயெழு வேல் அமுதனுடன்
தொடர்பு கொள்ளுக!

**முகவரி :**
**8.3.3 மெற்றோ மாடிமனை**
(வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக நிலப்பக்கம், 33ம் ஒழுங்கை வழி)
**55 ஆம் ஒழுங்கை,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு - 06.**

தொலைபேசி விசாரணைக்கென ஒதுக்கப்பட்ட நேரம் :
**திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மாலைவேளை!**

**தொலைபேசி :**
**2360488/2360694/4673929**

சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில்
**திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு !**

சுலபமான தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! மகோன்னத மணவாழ்வுக்குக்
குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனே!

# ஹனா கிராபிக்ஸ்
# Hana Graphics

## எமது சேவைகள்

தரமான சேவையை மலிவாகப் பெற்றுக் கொள்ளுங்கள்....!



கறுப்பு - வெள்ளைப் புகைப்படத்தை வர்ணமாக்குதல்



நீங்கள் விரும்பிய பின்னணியில் உங்கள் புகைப்படத்தைப் பொருத்துதல்.



புகைப்படத்தில் இருப்பவரை ரேகைச் சித்திரமாக்கி நிறந்தீட்டுதல்



வியாபாரம் மற்றும் தொழில் சம்மந்தமான விளம்பரங்களை வடிவமைத்தல்

புகைப்படத்தில் உள்ள உங்கள் முகத்தில் காணப்படும் தேவையற்ற புள்ளிகள், பருக்கள் என்பன நீக்கப்பட்டு அழகாக மாற்றப்படும். மற்றும் அனைத்துவிதமான வடிவமைப்புக்களும் மிகவும் குறைந்த விலையில் செய்து தரப்படும்.

இதைத் தவிர பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் அழைப்பிதழ்களும் மற்றும் அனைத்துவிதமான அழைப்பிதழ்களும் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

கல்யாண மற்றும் பூப்புனித நீராட்டு ஆல்பம் சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

சிங்களத்தில் இருந்து தமிழுக்கு, மற்றும் தமிழில் இருந்து சிங்களத்திற்கும் கடிதங்கள், விபரங்கள் மொழிபெயர்ப்பு செய்து தரப்படும்.

**இல.15, டயஸ் வீதி, மட்டக்களப்பு.**

**தொடர்புகளுக்கு : +94 652224820 / +94 719105237**

**மின்னஞ்சல் : hanags21@yahoo.com**

*Sun Printers - 05, Iruthayapuram West, Batticaloa. 065-2222597*